# சம்பளப் பணம் 48,000 ரூபா கொள்ளை!

PERIODICALS DIVISION
1980-1-22
LIBRARY

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 21 | தை 8 | ரபி-அவ் 3 | இதழ் 344
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 22-1-80

## சாவகச்சேரியில் சம்பவம்
### றிவோல்வர் கைப்பற்றப்பட்டது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர்களின் சம்பளப்பணம் ரூபா நாற்பத்தெட்டாயிரம்,நேற்றுபட்டப்பகலில் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டது!

கொள்ளையில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் இரண்டு இளைஞர்களைத் தேடி பொலிசார் தீவிர வலைவிரித்துள்ளனர்.

மேற்படி சம்பளப் பணம் கொள்ளை சம்பந்தமாகக் கூறப்படுவதாவது:

**கல்லூரிக்கு அருகாமையில்**

நேற்றுக் காலை சுமார் பத்து மணியளவில், வங்கியிலிருந்து பெறப்பட்ட சம்பளப் பணம் நாற்பத்தெட்டாயிரம் ரூபாவையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் திரு. பி. வெற்றிவேலுவும் மேலும் 3 ஆசிரியர்களும் காரில் கல்லூரிக்குக் கொண்டு வருகையில் கல்லூரிக்கு அருகாமையில் 2 சைக்கிள் இளைஞர்கள் காரை இடைமறித்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம். இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் காரின் கதவுப்பக்க கண்ணாடி சுக்கு நூறுகவே, உடைக்கப்பட்ட கதவுக்கண்ணாடி வழியாக ஒரு இளைஞர் றிவோல்வரை நீட்டினர் என்றும், இளைஞருக்கும் காருக்குள்

8-ம் பக்கம் பார்க்க)

# மா விலை அதிகரிப்புக்கு ரஷ்ய-அமெரிக்க தகராறு காரணம்

## அமைச்சர் லலித் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

**"உலகச் சந்தையில் மாவின் விலை ஒரு முத்தல் 2 ரூபா 20 சதமாகும், இங்கு 70 சதம் குறைத்து மக்களுக்கு 1 ரூபா 50 சதத்திற்கு கொடுக்கின்றோம், ரஷ்யாவிற்கும் அமெரிக்காவுக்குமிடையில் உள்ள பிரச்னை உலகசந்தையில் மாவின் விலை ஏற்ற இறக்கத்திற்கு காரணமாக உள்ளது. உலகசந்தையில் மாவிலை குறைந்தால் இங்கும் விலை குறைக்கப்படும்,"**

யாழ். அரசாங்க செயலகத்தில் நேற்றுக் காலை நடந்த மகாநாட்டில் வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு கூறினர்.

கச்சேரி வாசலில் அமைச்சர் மாலைசூட்டி வரவேற்கப்பட்டு மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இம் மாநாட்டில் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன், அரசாங்க அதிபர் திருயோகேந்திராதுரைசுவாமி எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ. அமிர்தலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி, மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் வட்டுக் கோட்டை எம். பி. திரு. ரி. திருநாவுக்கரசு, உதவி அரசாங்க அதிபர்கள், மற்றும் இலாகா அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**சீனி விலை**

அமைச்சர் அத்துலத் முதலி மேலும் கூறியதாவது; "உலகச் சந்தையில் சீனியின் விலை 4ரூபா 40 சதம்முதல் 4ரூபா50 சதம்வரை விற்கப்படுகிறது. நாங்கள் 4 ரூபா 50 சதமாக விற்கின்றோம். சீனியின் விலையேற்றத்தால் உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. கருப்பட்டி. சர்க்கரை போன்றவை கூடுதலாக உற்பத்தியாகும். சீனி விலை குறைந்தால் இந்த உற்பத்திகள் பாதிக்கப்படும். உலகச்சந்தையில் சீனியின் விலை குறைந்தாலும் குறைந்த விலையில் இங்கு விற்காவிடில், உள்ளூர் உற்பத்தியாளர்

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்திரராசா கொலை விசாரணை: இன்ஸ்பெக்டர் கருணரத்தின நீதிமன்றத்தில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு கைதியாக இருந்த போது கொலையுண்ட ஐயாத்துரை இந்திரராசா கொலை சம்பந்தமான விசாரணையில் சந்தேகநபர்களில் ஒருவரான பொலிஸ் இன்ஸ்பெக்டர் கருணரத்தின, சட்டத்தரணி திரு. தர்மகீர்த்தியினுல் ஆஜர் செய்யப்பட்டு, யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி திரு, கே. எஸ். மகேசன் முன்னிலையில் சரணடைந்தார்.

8-ம் பக்கம்பார்க்க)

### முக்கிய அறிவித்தல்
**நாவற்குளி வீடமைப்புத் திட்டம்**

அங்கத்தவர்கட்கு,

எதிர்வரும் 23-1-80 புதன்கிழமை காலை 8 மணியளவில் கௌரவ மாவட்ட அமைச்சர் அவர்களால் நாவற்குளி வீடமைப்புத் திட்டத்திற்கு அத்திபாரக்கல் நாட்டும் வைபவம் நடைபெறுமென அறிகிறோம். சங்க அங்கத்தவர்கள் சகலரும் சமூகந்தந்து தங்கள் வேண்டுகோளையும் கௌரவ அமைச்சரிடம் சமப்பிக்குமாறு நயவாக வேண்டுகிறோம்.

S. காந்தமூர்த்தி,
கௌரவ காரியதரிசி,
வட இலங்கை வீடமைப்புச் சங்கம்,

4735

### ஐஸ் தொழிற்சாலை
**பொதுமுகாமையாளர் பதவி**

யாழ்ப்பாணத்தில் அண்மையில் அமைக்கப்படவிருக்கும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையைப் பொறுப்பேற்று, அதன் பொது முகாமையாளராகக் கடமையாற்ற இளைஞர் ஒருவர் தேவை.

விண்ணப்பதாரர் B. Sc. பட்டதாரியாகவிருப்பது விரும்பத்தக்கது. அல்லது ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சையில் பௌதீகவியலில் அல்லது இரசாயனவியலில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவருக்கு, எமது செலவில் இந்தியாவில் மூன்று மாதங்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். எமது கம்பனியில் குறைந்தது மூன்று வருடங்களுக்கு சேவைசெய்வதாக ஒப்பந்தம் செய்யவேண்டும். நல்ல சம்பளம் வழங்கப்படும்.

தங்களது விண்ணப்பத்துடன், கல்வித்தகமைச் சான்றிதழுடன் அண்மையில் கிடைக்கப்பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் ஆகியவற்றையும் இணைத்து தபாலில் அனுப்ப வேண்டும். தனிப்பட்ட சிபார்சுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது.

விண்ணப்பமுடிவு திகதி 31-01-1980.

**வி. எஸ். ரி. இன்டஸ்றீஸ்,**
**வி. எஸ். ரி. கட்டடம்,**
**75, வார்ட் பிளேஸ்,**
**கொழும்பு-7.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

தேர்ச்சி அடைந்த படப் பிடிப்பாளர் அல்லது பழகிப் படம் பிடிப்பதற்கும் ஆண், பெண் விண்ணப்பிக்கலாம். எவற்றிக் ஸ்ருடியோ, வடலி யடைப்பு, பண்டத்தரிப்பு. 4713

சைக்கிள் மூலம் சிகரட்ஸ் விற்பனை செய்வதற்கு அனுப வமுள்ள 30 க்கும் 40 வய துக்கு மிடைப்பட்ட விற்பனை யாளர் தேவை. சம்பளம் மொத்தம் ரூபா 334/- 5-2-80 க்கு முன் விண்ணப்பிக்கவும். வசந்தா ஸ்ரோர்ஸ், ஊர் காவற்றுறை. 4731

சகல வசதிகளுமுள்ள தெல் லிப்பழையிலிருக்கும் கமத்தில் தங்கி வேலை செய்வதற்கு கமத்தொழில் அனுபவமுள்ள ஒருகுடும்பமும் வேலையாளும் தேவை. 'டிராக்டர்' ஓட்டும் அனுபவம் உள்ளவர் விரும் பத்தக்கது, தேவையான வேத னத்தைக் குறித்து நற்சாட் சிப் பத்திரங்களுடன் மனுச் செய்யவும். டாக்டர் பாலசுப் பிரமணியம், 69, பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம். 4736

ஒரு அம்பிளியயர் செட் தேவை. விற்பனைக்கு உள்ள வர்கள் தொடர்பு கொள்க செயலாளர் வேதவிநாயகர் தேவஸ்தானம். தாவடி. 4734


# "யாழ். மாவட்டத்தின் எதிர்காலம் கிளிநொச்சியில் தங்கியுள்ளது" -யோகேந்திரா

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சித் தொகுதி விவசாயத்திற்கு மட்டுமன்றி கைத் தொழிலுக்கும் சிறந்த ஒரு இடமாக இருக்கின்றது. இங்கு மிகவும் கடின உழைப்புடைய மக்கள் வாழ்வதால் இங்கு தென்னந்தும்புத் தொழிற் சாலை ஒன்றை அமைக்கின்றோம், இங்கு உற்பத்தி செய்யப்படும் தும்புப் பொருட்கள் ஈழத்திலேயே தலைசிறந்த பொருட்களாகத் திகழ வேண்டும்,

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் சிறுகைத்தொழில் இலாகாவினால் இரண்டரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் தும்புத்தொழிற்சாலைக்கு அத்திபாரக்கல்லை நாட்டிவைத்துப் பேசிய யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கண்டவாறு கூறினார்.

அடிக்கல் நாட்டு விழாவில் யாழ். மாவட்ட சிறுகைத் தொழில் இலாகா அதிபர் திரு எஸ். விசுவலிங்கம் உருத்திரபுரம் குருகுலத்தைச் சேர்ந்த திரு. கதிரவேலு ஆசிரியர் காந்தி நிலையத்தைச் சேர்ந்த திரு. சி. க. வேலாயுதபிள்ளை ஆகியோரும் மற்றும் பெரும் தொகையான மக்களும் கலந்து சொண்டனர்.

அடிக்கல் நாட்டுவிழாவில் கலந்து கொள்ளச் சென்ற அரசாங்க அதிபரை பொது மக்கள் உருத்திரபுரம் சிவன் கோவிலுக்கும் குடியேற்றத் திட்டங்களுக்கும் அழைத்துச் சென்றனர்.

வீதிகள் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன வீடுகளில் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டு அரசாங்க அதிபருக்கு மாலை அணிவித்து கௌரவித்தனர்.

அங்காங்கே கூடி நின்ற மக்கள் தங்களின் குறைகளையும் அரசாங்க அதிபருக்கு எடுத்து கூறினர்.

திரு. யோகேந்திரா துரைசுவாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது இலங்கையின் பல மாவட்டங்களில் தென்னந்தும்பிலிருந்து பல பொருட்களை உற்பத்தி செய்து பெரும் தொகையான வருமானத்தைப் பெறுகிறுர்கள் இத்தொழிற்சாலை இயங்க ஆரம்பித்ததும் இங்குள்ள மக்களும் பெருந்தொகையாகச் சம்பாதிக்க முடியும்.

### நம்பிக்கை தருவது கிளிநொச்சி

யாழ் மாவட்டத்தின் எதிர் காலத்தினது ஒப்பற்ற நம்பிக்கையாக விளங்கி வருவது கிளிநொச்சித் தொகுதியாகும். விவசாயம், கைத்தொழில் ஆகிய அபிவிருத்தித்துறைகளில் பெரும்பாலானவை தற்போது கிளிநொச்சி தொகுதியிலேயே அமைந்துவருததை யாவரும் அறிவீர்கள். யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் தொகுதிகளில் வாழ்கின்ற எல்லாப் பகுதி மக்களும் இங்கேவாழ்கின்றுர்கள். மனித உழைப்பு, மூலவளம், நீர்ப்பாசன வசதி, பசளைநிறைந்த மண் ஆகியவை, இந்த அபிவிருத்திப்பிரதேசத்தின் சிறப்பு அம்சங்களாக உள்ளன. எனவே தான் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் நாம் நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது கூட நாம் கூடுதல் தொகையை இப்பிரதேசத்திற்கே ஒதுக்கி வருகின்றேம். கிளிநொச்சியினது வளம் யாழ் மாவட்டத்தின் மாவட்டத்தின் முன்னேற்றமாக அமையும் என்பதே இதற்குக் காரணம். இத்தொகுதியின் மூலப்பொருட்கள் சரியான முறையிலே பயன் படுத்தி, அதன் முழுப் பிரயோசனத்தையும் பெறுவதற்கு தாங்கள் கூடுதலான அக்கறை செலுத்தி முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்- இந்த முயற்சியினது ஒரு அம்சமாகவே இன்று இங்கே தும்புத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி வைக்கின்ற வைபவம் நடைபெறுகின்றது. (கொ)


## விற்பனைக்கு

காணி ஐந்து பரப்பு துண்டுகளாக இரண்டு கைதடி நுணுவில் தமிழ் கலவன் பாடசாலைக்கு முன்பாக விற்பனைக் குண்டு. 30 - 1 - 80 க்கு இடையில் உறுதி எழுதி கொள்ளவும் தொடர்பு விலாசம் கதிர்காமர் துரைசாசா மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. 4730

5 ஸ்ரீ 4000 தொடர்பிலக்க Volkswagon கார் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு வி. எம். கே. நகை மாளிகை, சாவகச்சேரி. 4733

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மாவிட்டபுரம் 1. பூதர் செல்லையாவும்
2. பெண் சின்னத்தங்கமும்
வழக்காளிகள்

இல. ஈடு / 2409 எதிராக
அளவெட்டி, அளவெட்டி வடக்கு 1. வேலாயுதபிள்ளை
நாகராசா
எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு 2409 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1980 ஆம்ஆண்டு ஜனவரி (தை) மாதம் 28 ஆம் திகதி (28-1-80) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:** முதல் வட்டி ரூபாய் 5078/-ம் இதில் ரூபாய் 3000/- க்கு 1-6-78 திகதி தொடக்கம் 23-2-79 திகதி வரைக்கும் 100 க்கு 20 வீத வட்டியும் பின்திகதி தொடக்கம்மு முத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 624-35 சதம்

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகக் கோவிற்பற்று அளவெட்டி இறை "தடுகப்பை" நிலப்பரப்பு (7) இதில் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு ஐந்து (5-ம்) வடலிகளும் இதன் மிகுதியான மேற்கு எல்லைக் காணியின் மேற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும், மேற்கெல்லைக் காணியில் குறித்த காணியிலிருந்து வரும் வழிவாய்க்கால் பாவித்துரித்தும் இந்த நிலப்பரப்பு 5 க்கும் எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு ஒழுங்கை, மேற்கு இதன் மிகுதி ஆதனம். தெற்கு மாணிக்கம் பெண் பொன்னம்மாவின் ஆதனம். இது முழுவதும் இதற்குரியவைகளும், முற்பதிவு H 483 / 20.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
தெல்லிப்பழை கொமிஷனரும் விலை மதிப்பாளரும்.
5-12-1979. 4727

## வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திரம்
### (நெடுந்தீவு)

சாக்கின்தரம்:

| | | |
|---|---|---|
| 2½ புசல் அரிசி இல. | 1 | 489 |
| 140 இரு மாவு பை இல. | 1 | 74 |
| 1 அந். அரிசி இல, | 1 | 385 |
| 2½ புசல் அரிசி இல. | 2 | 602 |
| 150 இரு. மாவு இல. | 1 | 149 |
| நவதானியம் இல. | 1 | 706 |
| சீனி 2 அந். இல. | 1 | 121 |
| கழிவு | | 450 |
| துண்டுச் சாக்கு | | 06 |
| | | 2982 |

கேள்வி விண்ணப்பத்தின்போது மீளளிப்பு வைப்புப்பணம் ரூபா 300/- உரொக்கமாகச் செலுத்த வேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால்மூலம், தபாலுறையில் சாக்குக் கேள்விப்பத்திரம் எனக்குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். காரியாலய நேரங்களில் சாக்குகளைப் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவு திகதி 26-1-1980 பிற்பகல் 1 மணி.

தொடர்பு முகவரி,
**க. கோபாலபிள்ளை**
பொதுமுகாமையாளர்
நெடுந்தீவு பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கம்
21-01-1980. நெடுந்தீவு.
4720

**இ. சிவசுப்பிரமணியம்**
சட்டத்தரணி & நொத்தாரிஸ்
திருநெல்வேலி தெற்கு
யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்
### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணித்த யாழ்ப்பாணம் இல. 77, கச்சேரி-நல்லூர் ரோட்டு, இராமலிங்கம் சபாரத்தினம் தர்மரத்தினத்தின் ஆதனங்களும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

தர்மரத்தினம் கைம்பெண் மதிவதனி. இல. 77, கச்சேரி - நல்லூர் ரோட்டு, யாழ்ப்பாணம்.
மனுதார்

இல. தத்துவம்-3504
எதிர்
தர்மரத்தினம் சூரியகுமார், இல. 77, கச்சேரி-நல்லூர் ரோட்டு, யாழ்ப்பாணம்.
எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்ணயிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980 ம் ஆண்டு மாசி மாதம் 29 ம் நாளன்று முற்பகல் 10-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்
4729


வயாவிளான் ஞானவைரவர் ச. ச. நி.

# இன்றைய உதைபந்தாட்டப் போட்டிகள்

(பலாலி)

'ஈழநாடு' ஆதரவில் வயாவிளான் ஞான வைரவர் சன சமூக நிலையம் நடாத்தும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய போட்டியின் 7 வீரர் ஆட்டத்தில் பலாலி உதய கலைவாணி வி.கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி இந்து இளைஞர் வி. கழகம் போட்டியிடும். 11 வீரர்ஆட்டத்தில் உரும்பராய் ஜொலிஸ்ரார் வி. கழகத்தை எதிர்த்து கரணவாய் - வள்ளுவர் வி. கழகம் போட்டியிடும்.

### போட்டி முடிவுகள்

7 வீரர் போட்டியில் மயிலங்காடு - ஸ்ரீமுருகன் வி. கழகத்தை, பலாலி உதய கலைவாணி வி. கழகம் 3-0 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது. மத்தியஸ்தராக திரு. எம். ஜெகநாதன் கடமையாற்றினர். 11 வீரர் போட்டியில் கொழும்புத்துறை ஜெட் லையினேஸ் வி. கழகம், அளவெட்டி வளர்மதி வி. கழகத்தை 3-1 கோல்களால் தோற்கடித்தது. மத்தியஸ்தராக திரு. சி. எஸ். அருள்பிரகாசம் கடமையாற்றினர்.

......

## கம்யூ. கட்சி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும் லைசென்ஸ் முறையில் அங்கீகரிக்கப்பட்டுநடைமுறைப்படுத்தப்பட்ட இறைச்சிக் கடைகளை உள்ளூராட்சிச் சபைகள் கேள்வி ஒப்பந்தத்தின் மூலம்

(7-ம் பக்கம் பார்க்க)


## வெளிநாடுகளில் வேலைக்கு பெண்கள் தேவை

1. கவுஸ் நேஸஸ் (House Nurses) - Rs. 6000/-
2. நேஸஸ் (Nurses) - Rs. 8000/-
3. விற்பனைப் பெண்கள் (Sales girls) - Rs. 6000/-
4. தையல்வேலைக்கு பெண்கள் (Sewing girls) Rs. 40/- per hour
5. அரசமாளிகைகளுக்கு பணிப்பெண்கள் (Palace Maids) 3500-4500/-

எங்களின் யாழ்ப்பாண அலுவலகத்திலும் கொழும்பு அலுவலகத்திலும் பணியாற்றுவதற்கு காரியாலயத் தட்டெழுத்தாளர்/லிகிதர்

**சன்றைஸ் ஏஜன்சீஸ்**
3ம் கட்டை,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்
Labour Licence No: 326 4728

## மரண அறிவித்தல்

### பொ. திருநாவுக்கரசு

திரு. பொ. திருநாவுக்கரசு (இளைப்பாறிய நில அளவைப் பகுதி உப அத்தியட்சகர், உத்தரவுபெற்ற நில அளவையாளர்) 21-1-80ல் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னரின் மரணச்சடங்கு இன்று 22-1-80 செவ்வாய்க்கிழமை 'அம்பிகை வாசா', ஏழாலை மேற்கு, ஏழாலையில் பி. ப. 1-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்: திருமதி திருநாவுக்கரசுவும், பிள்ளைகளும். 4737


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எங்கள் நேரம் முழுவதும் இறைவனின் சொத்தாயின் ஒரு கணத்தையேனும் யாம் வீணுக்குவது தகுமா? அதேபோல் நாம் கடவுளின் உடைமைகளாயின் எங்கள் சீவியத்தின் ஒரு பகுதியைத் தானும் ஏன் வீண்புலனின்பங்களிற் செலவாக்க வேண்டும்?

--மகாத்மாகாந்தி

## மக்கள் கருத்து

### கலைஞர்கள் கவலை தீருமா?

கலைஞர்கள், நமது நாட்டுக் கலைகளுக்கும், கலாச்சார மேம்பாட்டுக்கும் அல்லும் பகலும் பாடுபட்டு தமது முதுமைப் பருவத்தில் மிகவும் கஷ்டப் படுவது நமக்குப், நாட்டுக்கும் நல்லதல்ல. உயிருடன் அவர்கள் வாழும்போது கௌரவித்து, கஷ்டப்படும் கலைஞர்களுக்குப் பொருளுதவி செய்யப்படுவதே இன்று வேண்டப் படுமொன்ருகும்.

சமீபத்தில் பல முதுபெரும் கலைஞர்களுக்கு கொழும்பு டவர் மண்டபத்தில் வைத்து ஜனதிபதி அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபா 5000/- பணமும் ஆயுள் காப்புறுதிப் பத்திரமும் அளித்துக் கௌரவித்தமை எண்ணி எண்ணி மகிழத்தக்கதுடன் பாராட்டப்படவேண்டிய நிகழ்ச்சியுமாகும்.

பண்டைக்காலத்தில் மன்னர்களும், பெருநிதி படைத்த வள்ளல்களும் புலவர்களை ஆதரித்துப் பேணிக் காப்பாற்றிய தாக இலக்கியங்கள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

நமது நாடு சுதந்திரம் பெற்றபின் முதுபெரும் கலைஞர்களையும், ஏழ்மையில் வாடும் கலைஞர்களையும் நாடும் அரசும் முற்ருகக் கைவிட்டிருந்ததை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்த நாட்டுக் கலைஞர்கள் எந்த மதத்தை, எந்த மொழியைத் தழுவி வாழ்ந்தாலும் கலைஞர்களுக்கு உற்றுழி உதவி உறுபொருள் கொடுத்து உதவ அரசாங்கம் முன்வரவேண்டும்.

சமீபத்தில் கௌரவித்த கலைஞர்களைப்போன்று நாட்டின் பல பாகத்திலும் தமிழ், முஸ்லிம் கலைஞர்கள் வறுமையில் வாடுகின்ருர்கள். அவர்களைப் பொதுஸ்தாபனங்கள் அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டி அவர்கள் தமது முதுமைக்காலத்தில் மகிழ்ச்சியுடன் வாழ வழிவகை செய்யப் படவேண்டும்.

ஒரு புலவர் ''கல்லைத்தா ர் மண்ணைத்தான் காய்ச்சித்தா குடிக்கத்தான் கற்பித்தாளு?'' என கடவுளை நொந்து பாடியுள்ளார். இன்றும் கலைஞர்கள் பலர் இந்த நிலையில் வாழ்கிருர்கள். இவர்களுக்கு இன வேறுபாடின்றி உதவ அரசு முன்வரவேண்டும்.

வடமாகாணத்தில் சிறந்த எழுத்தாளர்களும், நாதஸ்வர வித்துவான்களும், மேளகாரரும் மற்றும் வித்துவத்தன்மையில் துறைபோனவர்களும் பலர் வாழ வசதியற்று அயலவர் உறவினர் உதவியின்றியும், அரசாங்கத்தின் உதவியின்றியும் கஷ்டப்படுவதை அந்தந்தப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்களுக்குப் பொருளுதவி புரிய அரசை வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

புத்தொளி
அச்சுவேலி

# மிளகாய்க்கு நியாயமானவிலை நிர்ணயிக்கத் தவறினால்...

## கமத்தொழிலின் எதிர்காலம் இருள்: யோகேந்திரா துரைசுவாமி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

''நாம் செத்தல் மிளகாயை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாதாஎன்ற கேள்வி எளலாம். இது சாத்தியமானதுதான், இதன் விளைவு இத்தொழிலையே தங்கள் சீவியமாகக் கொண்ட விவசாயிகளும் குடும்பத்தினரும் பாதிப்படைவார்கள். இத்துடன் வேலையற்ருேர் தொகையும் அதிகரிக்கும். ஏனெனில் மிளகாய் உற்பத்தியில் அநேக தொழிலாளர் தேவைப்படுவர்''

யாழ், சென்ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடந்த தேசிய விலைநிர்ணய ஆணைக்குழு முன்னிலையில்சாட்சியமளித்த யாழ் மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கண்டவாறு கூறினர்.

திரு. வி, என். டி. சில்வா தலைமையிலான இந்த ஆணைக் குழுவில் திருவாளர்கள் எம்! இராமலிங்கம், கே. விக்கிரமசிங்கா, ஏ. சி. எம். பெர்ஞண்டோ, குவின்டஸ் ஜெருட்றிக்கோ, கே, அரியரத்தினம், . பி. ஜினதாசா, டாக்டர் பி. ஏ. எஸ். தகநாயக்கா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

விசாரணைக்குழு விசாரணை நடத்தியபோது நல்லூர் எம். பி. திரு. சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. திரு.கே. துரைரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ராஜலிங்கம் மற்றும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் வடபகுதி உற்பத்தியாளர்கள் விவசாயிகள் சமுகமளித்திருந்தனர்.

முதலாவதாக சாட்சியமளித்த அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி மேலும் தமது சாட்சியத்தில் குறிப்பிட்டதாவது!

உப உணவுப் பொருட்களை இறக்குமதிசெய்ய செலவழிக்க வேண்டிய அரிதான அந்நிய செலாவணியை மிச்சப்படுத்துவதற்காக இந்த உப உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கமக்காரர்களுக்கு அரசாங்கம் ஊக்கம் கொடுத்த பின்னணியை இவ்வேளையில் ஆராய்வது மிகவும் பொருத்தமாகும்.

இத்திட்டம் முதன்முதலாக அரசாங்கத்தால் 1965ம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்டு கடந்த 14 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் வருடாவருடம் உற்பத்தி செய்யப்படும் நிலப் பரப்பு கூடிக்கொண்டேபோகிறது.

உப உணவு உற்பத்தியை விருத்தி செய்வதற்காக அரசாங்கத்தினல் வழங்கப்பட்ட ஊக்கத்தின் பயனுகக் காலம் காலமாக நெல் உற்பத்திசெய்யப்பட்ட பகுதிகளில் படித்து வேலையற்றிருக்கும் வாலிபர்களுக்கான இளைஞர் திட்டங்களை, விஸ்வமடு, திருவையாறு, அக்கராயன் குளம், முளங்காவில், முத்தையன் கட்டு போன்ற இடங்களில் வெற்றிகரமாகத் திறக்கக் கூடியதாக இருந்தது.

மிருசுவில் என்ற இடத்தில் படித்து வேலையற்றிருக்கும் பெண்களுக்கான ஒரு திட்டத்தை உண்டாக்கி வெற்றிகரமாகச் செயலாற்றிக்கொண்டிருக்கிருேம்.

1972 / 73ம் ஆண்டுக் காலப் பகுதியில் மிளகாய் இறக்குமதி முற்ருகத் தடைசெய்யப்பட்டது. மிளகாய் உற்பத்திக்கு மேலும் ஊக்கம் கொடுத்தது. ஆரம்பத்தில் நுகர்வோர்களின் தேவையை உற்பத்தி பூர்த்தி செய்யமுடியாதிருந்த காரணத்தால் விலை அதிகரிப்பு ஏற்பட்டுஉற்பத்தி அதிகரிக்கப் படிப்படியாக விலை குறைந்து 12க்கும் 15க்கும் இடையில் வந்தது.

மிளகாயின் விலை உச்சக் கட்டத்தை அடைந்திருந்த நேரத்திலும் கடைத் தரகர்களே லாபம் அடைந்தார்கள். இவர்கள் விலை குறைத்து வாங்கி மிளகாய் உற்பத்தி குறைந்த காலத்தில் கள்ள விலைக்கு விற்று பெருலாபம் அடைந்தார்கள். உற்பத்தியாளர்களிடமிருந்து விலைக்கு வாங்கி விற்க அரசாங்கத்தினுல் மேற்கொள்ளப்பட்ட முறையின் குறைபாட்டுக் காரணத்தைப் பயன்படுத்தி உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் தம்மால் இயன்ற வரை ஏமாற்றிஞர்கள். மிளகாய்ச் செய்கையினல் பெருலாபம் கிடைத்ததின் காரணமாக இளைஞர் விவசாயத் திட்டங்களில் இளைஞர்களின் கவனம் திரும்பியது. இதன் காரணமாக வேலையற்றிருந்த வாலிபாகளை அரசாங்கத்தினுல் சமாளிக்கக்கூடியதாக இருந்தது. அல்லது இவர்களை வேலைகேட்டு அரசாங்கத்தைத் தொந்தரவு செய்திருப்பார்கள். மிளகாய் உற்பத்தி அதிக இலாபத்தைக் கொடுத்ததினுலும் இளைஞர் விவசாயத் திட்டத்தின்கீழ் அநேக இளைஞர்கள் சேர்ந்தார்கள்.

### 60 வீதம் மிளகாய் உற்பத்தி

யாழ்ப்பாண விவசாயியைப் பொறுத்தவரையில் அவர்களின் சீவியம் பெரும்பாலும் மிளகாய் உற்பத்தியிலேயே தங்கியுள்ளது. இதன் காரணமாக பல இளம் விவசாயிகள் இதைப் பெருமளவில் செய்கிருர்கள். இலங்கையில் மற்றப்பகுதிகளில் உள்ள சேனைப் பயிர்ச் செய்கை போலல்லாது யாழ்ப்பாணத்தில் நீர்ப்பாய்ச்சி மிளகாய் உற்பத்தி செய்வார்கள் இவைகள் 6 மாதங்களில் தொட்டு 8 மாதம்வரை உயிர் வாழக்கூடியது. இவின் சுமார் 60 வீதம் மிளகாய் தேவையை யாழ்ப்பாண மாவட்டம் உற்பத்தி செய்கிறது. மிளகாய் செய்கை யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இலகுவானதல்ல. யாழ்ப்பாண விவசாயிகள் அதிகாலை எழும்பி நீர் இறைக்கவேண்டும். கன்றுகளை மிகவும் கவனமாகப் பாதுகாக்கவேண்டும்.

இப்படியான பெருமுயற்சியின் கஷ்ட உழைப்பின்பயனுக மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டு வந்தபொழுதிலும் 1976ம் ஆண்டு தோன்றிய தொற்று நோயினுல் அனேகமாக ஒரு பகுதி முற்ருக அழிந்தன. இந் நோயை உடனடியாகக் கண்டுபிடித்து அகற்றமுடியாமற் போய்விட்டது. அரசாங்க ஆய்வுகூட ஆராய்ச்சியாளர்களால் இந்த நோயை அகற்றுவதற்கான மருந்து வகையைக் கண்டுபிடிப்பதற்குச் சில காலம் எடுத்தது. திரு. ரேஸ் பெலேஸ் என்ற ஆராய்ச்சியாளரால் அந்த நேரத்தில் தகுதியான மருந்தென்று கருதப்பட்ட 'சுமிசிலியன் அம்புஸ்' என்ற மருந்து ஆகாய விமானமாகக் கொண்டுவரப் பட்டு மிளகாய் அறுவடை செய்யப்பட்ட பகுதிகளுக்குத் தெளிவிக்கப்பட்டது.

விவசாய உற்பத்தியின் செலவினங்களைக் கருத்திற்கொண்டு உற்பத்தியாளர்களையும், கர்நுவோர்களையும் பாதிக்காவண்ணம் ஒரு நியாயமான விலையை நிர்ணயிக்கவேண்டுமென்று நாம் அரசாங்கத்தின் கவனத்திற்குப் பன்முறை கொண்டுவந்துள்ளோம்.

உழவு இயந்திர வாடகைக் கூலி, தொழிலாளர் சம்பளம், மண்ணெய், பசளை, கிருமிநாசினிகள் போன்ற பொருட்களின் விலைகள் பாரதூரமாக ஏற்றமடைந்ததால் மிளகாய் உற்பத்திச் செலவு அதிகரித்தது. இதன் காரணமாக யாழ்ப்பாண மிளகாய் உற்பத்திசெய்யும் விவசாயிகள் மிளகாய்க்கு அடிமட்ட விலை ஒன்றை நிர்ணயிக்கவேண்டுமென்று ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த 1977ம் ஆண்டிலிருந்து கோரிக்கை விடுகிருர்கள்.

இங்கு ஒரு கேள்வி எழலாம். ஏன் நாம் இந்த மிளகாயை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது? என்று. இது சாத்தியமானதுதான். இதன் விளைவு, இத்தொழிலையே தங்கள் சீவியமாகக் கொண்ட விவசாயிகளும், குடும்பத்தினரும் பாதிப்படைவார்கள். இத்துடன் வேலையற்ருேர் தொகையும் அதிகரிக்கும். ஏன் எனில் மிளகாய் உற்பத்தியில் அநேகம் தொழிலாளர்கள் தேவையுண்டு. மிளகாய் இறக்குமதிக்கு அரிதான அந்நியச் செலாவணி போவதுடன், இளம் விவசாயிகள் தங்கள் தொழில்களை விட்டு வேலையற்ருேர் பட்டியலிற் சேர்ந்து கொள்வார்கள். ஆகவே அரசாங்க விலை நிர்ணய ஆணைக் குழுவின் சிபார்சை ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நான் மனதார நம்புகிறேன்.

இந்த நேரத்தில் மிளகாய்ச் செய்கை வீழ்ச்சியைக் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டியுள்ளது. 78/79ம் ஆண்டு உற்பத்திசெய்யப்பட்ட நிலப் பரப்பின் அளவும், 78/79ல் செய்யப்பட்ட அளவையும் நாம் ஒப்பிட்டுப் பார்த்தால்;

**காலபோகம் 1977/78**

உற்பத்திசெய்யப்பட்ட ஏக்கர்: 11625.

உற்பத்தி; 139500 அந்தர்.

**காலபோகம் 1978/79**

உற்பத்திசெய்யப்பட்ட ஏக்கர்: 7858.

உற்பத்தி: 94296 அந்தர்.

மிளகாய் உற்பத்திக்கு 1979/80ம் ஆண்டுக்குக் குறிப்பிட்ட நில அளவு:

மழையின் உதவியால்-1114 ஏக்கர்.

நீர்ப் பாய்ச்சல் (நெற்காணி) 7722.

நீர்ப்பாய்ச்சல் (மேட்டுநிலம்) 8939.

உற்பத்தி மதிப்பீடு: 103280 அந்தர்.

78 79ல் உற்பத்திக்குள்ளாகிய ஏக்கர் 7858ல் இருந்து 79/80க்கு நாங்கள் 9675 ஆகக் கூட்டிக் கணித்துள்ளோம். ஆனல் இதுவும் அரசாங்கம் கொடுக்கும்உற்சாகத்தில்தான் தங்கியுள்ளது.

உற்பத்திக்கு அவசியமான பொருட்களான கிருமிநாசினிகள், நீர்ப்பாசனம் கூலி.

(7-ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு தபால் சேவை

மட்டக்களப்பு தபால் நிலையத்திற்கு பிரத்தியேகமான தபால் வாகனம் ஒன்றிருந்தால் தபால் விநியோகத்தில் தாமதம் ஏற்படமாட்டாது.

மட்டக்களப்பிற்கு காலையில் கொழும்பு தபாலும், மதியம் யாழ்ப்பாண தபாலும் புகையிரதத்தின்மூலம் வருகின்றன. குறிக்கப்பட்ட நேரத்தில் புகையிரதம் வந்தும் பயன் இல்லை. காரணம் தபால் பைகள் பலமணிநேரம் புகையிரத நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இவைகளை எடுத்துச் செல்ல பஸ் வண்டிகள் போதிய நேரத்திற்கு வருவதில்லை. இதனல் தபால் சேவகர்கள் மிகவும் பாதிப்படைகின்ருர்கள். காரணம் தபால்கள் தாமதித்து வருவதினுல் பொதுமக்கள் அவர்கள்மேல் சீறிவிழுகின்ருர்கள்.

எனவே மட்டக்களப்பு தபால் நிலையத்திற்கு தனியான அஞ்சல் வாகனம் வழங்கப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

தமிழினியவன்
மட்டக்களப்பு

## நாடும் நடப்பும்

''நாங்கள் சொன்னது சரியாய்ப் போச்சா இல்லையா?'' எதிர்க்கட்சியினர் கேட்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பம்.

காலித்தொகுதி இடைத் தேர்தல் முடிந்ததும் மா, பாண், மண்ணெண்ணை மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகூடுகிறதா இல்லையா என்று எதிர்க்கட்சியினர் கூறினர்கள்.

தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் மட்டுமல்ல பாராளுமன்றத்திலுள்ளே வரவு-செலவுத்திட்டவிவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்த போதே எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலரும் இவ்விதம் கூறினர்கள்.

இந்தப் பொருள்களின் விலை ஏருது என்று உறுதியளிக்க முடியுமா? என்று கூட ஒரு உறுப்பினர் நிதிஅமைச்சருக்கு சவால்விட்டதாக ஞாபகம்.

அவர்கள் சொன்னது உண்மையாகிவிட்டது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவிலிருந்து சீனி, மா, பாண் ஆகிய அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்துவிட்டது.

சீனியின் விலை குறைந்ததால் பனங்கட்டி உற்பத்திவீழ்ச்சி அடைந்துவிட்டதென்றும் பனங்கட்டித் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுப் பலர் வேலை இழந்துள்ளனரென்றும் வடபகுதி எம். பி.க்கள் பலரும் சுட்டிக்காட்டிவந்தனர்.

இப்போது சீனி விலை ஒன்றரை ரூபாயால் அதிகரிக்கப் பட்டுவிட்டதே என்று வடபகுதி எம். பி.க்கள் குறை சொன்னால் அதற்குப் பதில் சொல்வதற்கு அரசாங்கத்துக்கு ஒரு வாய்ப்பு!

என்றாலும் அத்தியாவசியப் பொருள்களின்விலைஉயர்வு பற்றி எதிர்க்கட்சியினர் சும்மா இருப்பார்களா? இருக்கத்தான் முடியுமா?

இப்பொழுது பாராளுமன்றத்தைக் கலைத்து உபதேர்தல் வைத்துப்பாருங்கள்; இந்தியத் தேர்தல் முடிவுபோல் இங்கும் மாற்றம் ஏற்படுகிறதா இல்லையா என்று எதிர்க்கட்சியினர் சவால் விடமாட்டார்களென்று என்ன நிச்சயம்!

ஃ ஃ ஃ

மகாசிவராத்திரி விழா அடுத்த மாதம் 14ந் திகதிவருகிறது. சிவராத்திரி என்றால் திருக்கேதீச்சரத்தை நினையாதவர் யார்? திருக்கேதீச்சரத்தை நினைத்ததும் கேரதீவுவழிப் பிரயாணமும் மகாதேவாப்பாலமும் நினைவுக்கு வராதா?

மகாதேவாப் பாலம் ஒரு மாதத்துக்குள் உருப்படாது. ஆனல் கேரதீவுப் பாதைப்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## "வளர்ந்து வரும் வித்தியாசாலைகள்

# ஐந்தாண்டுத் திட்டங்களை

## வகுத்து செயல்பட வேண்டும்"

### சரவணை நாகேஸ்வரி பொன்விழாவில் பண்டிதர்

(வேலணை)

"வளர்ந்துவரும் வித்தியாசாலைகள் குறைந்தது ஐந்தாண்டுத் திட்டங்களையாவது வகுத்துச் செயற்பட்டால் பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து பணம் ஒதுக்குவது வசதியாக இருக்கும்."

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலைப் பொன் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

வேலணை வட்டாரக் கல்வியதிகாரி பண்டிதர் பொன். கணேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பண்டிதர் இரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இவ்வித்தியாசாலை அபிவிருத்திச் சபையினரும், பழைய மாணவர்களும் பாடசாலையின் வளர்ச்சியில் பெரிதும் நாட்டமுள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே திட்டமிடல் குழுவொன்றை அவர்கள் நியமித்து ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கவேண்டும்.

"அரசாங்கத்தில் போதிய உரிமையில்லாததால் எமது கல்வி நிலையை உயர்த்த நாம் விரும்பியவாறு செய்யவோ, ஆசிரியர்களை நியமிக்கவோ முடியாமலிருக்கிறது.

"இந்த வித்தியாலயத்தை மகா வித்தியாலயமாக்குவதற்கு நான் சிபார்சுசெய்துள்ளேன். கல்வியதிபதியும் அதற்கான அறிக்கையை அமைச்சுக்கு அனுப்பியுள்ளார். விரைவில் முடிவுதெரியும்" என்றார்

பொன்விழா ஞாபகார்த்தமாக வித்தியாசாலையின் பழைய மாணவரும், பட்டயக் கணக்காளருமான திரு. சி. வி. தளையசிங்கம் திறந்தவெளி அரங்கை அமைத்துக்கொடுத்தார். அதனை வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் திறந்து வைத்தார்.

இவ்விழாவில் பட்டயக் கணக்காளர் திரு.சி.வி.தளையசிங்கம் பேசுகையில் கூறியதாவது:



"எமது கிராமம் வளர்ச்சியடையவேண்டுமானால் இந்த வித்தியாசாலைவளர்ச்சியடையவேண்டியது அவசியமாகும். இவ்வளர்ச்சி தனியே அரசாங்கத்தால் மட்டும் ஏற்பட்டுவிடுமென நாம் எதிர்பார்க்கமுடியாது. பொதுமக்களும் தம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்.

"இந்த வித்தியாசாலை மிக விரைவில் தரமுயர்த்தப்பட்டு இப்பகுதி மக்களின் கல்வித் தேவையையும் பூர்த்திசெய்து பொருளாதார நிலையிலும் முன்னேற்றமடையச் செய்யும் என நம்புகிறேன்.

"தீவுப் பகுதியில் மிகவும் துரிதமாக வளர்ச்சியடைந்து வந்த சிரேஷ்ட பாடசாலைகள் மத்திய மகாவித்தியாலயம் இடைக்காலத்தில் தோன்றிய மையினால் தம் வளர்ச்சியில் ஒரு தயக்க நிலையை அடைந்தன. இத்தயக்க நிலையை நீக்கி, இழந்த வளர்ச்சி வேகத்தினை மீண்டும் பெற்றுக் கிராமங்கள் பூரணக் கல்வித் தேவையைப் பூர்த்திசெய்யத் தக்கதாக மகாவித்தியாலயங்களாகத் தரமுயர்த்தி, அத்தரத்திற்கேற்பக் கட்டட வசதி, ஆசிரிய நியமனம், விஞ்ஞானகூடம், நூல்நிலையம், விளையாட்டு மைதானம் ஆகிய அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டும்."

பொன்விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. (கு)

## காபூல் விமான நிலையத்தில் இறங்கிய ரஷ்ய விமானம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டுள்ள சோவியத் யூனியன் துருப்புக்களுக்குத் தேவையான உணவு, ஆயுதங்களை எடுத்துக்கொண்டுவந்த சோவியத் விமானம் ஒன்று திடீரென காபூல் விமான நிலையத்தில் இறங்கியது!

காபூல் விமான நிலையத்து கட்டுப்பாட்டுச் செயல்கள் ஸ்தம்பித நிலையை அடைந்ததுடன் மாஸ்கோவிற்குச் செல்லவிருந்த ஆப்கான் விமானம் தாமதமாகவே சென்றது.

இவ்வேளையில் ஆப்கானிஸ்தான் புதிய அரசாங்கம் அதன் தேசிய நிறத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆப்கானிலுள்ள முஸ்லிம் புரட்சிவாதிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திலேயே அதன் சிவப்பு நிறக் கொடியை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. (கு)

## இளைஞர் சேவைத் திட்டம்

[மன்னார்]

மன்னார் மாந்தை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தேசிய இளைஞர் மன்றச்சேவைத்திட்டம் அங்குரார்ப்பணஞ்செய்து வைக்கப்பட்டது. (த)

## பழைய நூல்களையும் ஏட்டுச் சுவடிகளையும் பெட்டகத்தினுள் பூட்டிவைத்துள்ளனரே!

### பேராசிரியர் இந்திரபாலா கவலை

(யாழ்ப்பாணம்)

"நமது மக்கள் பழைய நூல்களின் அருமை பெருமைகளை உணராது இருக்கின்றனர். 'பெட்டகங்களில்' பழைய ஏடுகளைப் பூட்டி வைத்து எவருக்குமே பயன்படாத வகையில் அவற்றைப் பூட்டிவைத்துள்ளனர்"

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலை கலைக் கழகத்தில் நடைபெற்ற நூலக சங்கத்தின் வடபிரதேசக்கிளையினரின் நூலகவியற் கருத்தரங்கில் கருத்துரை வழங்கிய பேராசிரியர் கா. இந்திரபாலா குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"40 ஆண்டுகளுக்கு முன் இலங்கை இளைஞர் காங்கிரஸ் எத்தனையோ நூல்களை வெளியிட்டிருந்தது அவற்றின் பிரதிகள் இன்று அந்த இயக்கத்தைச் சார்ந்திருந்தவர்களிடம் கூட இல்லை. கிடைப்பனவற்றைப் படப் பிரதிகள் செய்து யாழ் பல்கலைக்கழக நூலகத்தில் வைப்பது ஆராய்ச்சி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

"எழுத்தாளர்களது கடிதங்கள், பழைய பத்திரிகைகள், ஆவணங்கள், தனியார் குடிதங்கள் என்பன நவீன ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும்பயன் தரும் தரவுகளைத் தர முடியும் அவற்றையெல்லாம் சுலபமானவகையிலே பேணுவதற்குத் தற்போது பலவகைகளிலும் வாய்ப்புண்டு. நகல் பிரதிகளையும், புகைப்படங்களையும், துணைக்கொண்டு இவற்றைப் பேண முடியும்.

"நம்மால் பேணப்படவேண்டிய பழைய நூல்களையும், பத்திரிகைகளையும், ஆவணங்களையும், துண்டுப் பிரசுரங்களையும் பிரித்தானிய நூலகம் பேணி வைத்துள்ளமையைக் காணலாம்.

இக்கருத்தரங்கில் யாழ் பல்கலைக் கழக நூலகத்தைச் சேர்ந்த திரு. ஆ. சிவநேசச் செல்வன் பேசுகையில்,

"யாழ்ப்பாணப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் நூலக ஒழுங்கு மிகவும் கேவலமாகயேயுள்ளது. நூலகங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் சீராக்குவதன் மூலமும் புதிய சகாப்தம் ஒன்றினை உருவாகக் முடியும். பிரஜ்ஞை பூர்வமாக நூலகங்களை உருவாக்கும் எண்ணம் எம்மவர் மத்தியில் கால் கொள்ளவேண்டும். 'சரித்திரம் என்பது சாகாத தொடர் கதை" என்றால் அதற்கு உதவுவன நூல்களே" என்றார்.

"இலங்கை நூலகச்சங்கத்தினதும் கருத்தரங்கத்தினதும் செயலாளரான திரு. கா. மாணிக்கவாசகர் பேசுகையில், "பாடசாலை நூலகங்களைக் குறைசொல்வதால் பயனில்லை. அமைச்சே பாடசாலை நூலகக்குறைபாடுகளைப் போக்க முன்வரவேண்டும். வரவுசெலவுத் திட்டத்தில் 10 சதவீதத்தை நூலகத்திற்குச் செலவழிக்கவேண்டும். என்றார்

## கைத்தறி ஆடைகள் விற்பனை இயக்கம்

### இளைஞர் பேரவை தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

தமிழ் இளைஞர் பேரவை கைத்தறி நெசவு ஆடைகளை விற்பனை செய்யும் இயக்கம் ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

தமிழ் இளைஞர்பேரவையின் காங்கேசன்துறைத் தொகுதிக் கிளைக்கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

கைத்தறி நெசவு ஆடைகள் உற்பத்திசெய்பவர்களை ஊக்கம் கொடுக்கும்பொருட்டு அவற்றை மக்களிடம்கொண்டு சென்று விற்பனைசெய்யவேண்டும் என்றும், அடுத்த மாசி மாதம் 14ந் திகதி சிவராத்திரி தினத்தன்று கீரிமலை சிவன் கோவிலில் விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்து கைத்தறி ஆடைகளை விற்பனைசெய்வதென்றும் ஆரம்ப நிகழ்ச்சிக்கு கூட்டணித்தலைவர்களை அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் மாசிமாதம் 23ம் 24ந் திகதிகளில் அளவெட்டி மாதகல் ஆகிய கிராமங்களில் கைத்தறிஆடைகளை வீடுவீடாகச்சென்று விற்பனைசெய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (கொ)

## "கீரிமலையில் பஸ்டிப்போ அமைக்கப்பட வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"கீரிமலை, சரித்திரவரலாற்றுப் பின்னணியும், உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் பிரதேசமாகத் திகழ்வதால், அங்கு புதிய பஸ்டிப்போவொன்று ஆரம்பிக்கப்பட்டு, தூரஇடங்களுக்கான பஸ்சேவைகளை அங்கிருந்து நடாத்தவேண்டும்."

இவ்வாறு கோரும் முக்கிய தீர்மானம், சேந்தாங்குளம், சண்டிருப்பாய் போக்குவரத்து பொதுசனசேவைப் பாவனையாளர்சங்க 27வது வருடப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இளவாலை காடிவளை, இந்து இளைஞர்சங்க முன்றலில்நடைபெற்ற வருடாந்தக் கூட்டத்துக்கு தற்காலிக தலைவர், திரு கே. குமாரசாமி தலைமைவகித்தார்.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் சில வருமாறு:-

"அபிவிருத்தி அடைந்துவரும், கிராமிய மக்களின் தேவைகளுக்கேற்ப புதிய சேவைகளை ஆரம்பிக்கவேண்டும்.

"நேரமாற்றம் செய்யும் போது மக்கள் சிரமமின்றி புதிய நேரங்களை அறிவதற்கு, நேரசூசிகளை எல்லோருக்கும் தெரியும்படி வெளியிடவேண்டும்.

789, 791, 764, 769சேவைகள் திருப்திகரமாக இல்லாதபடியால் இச்சேவைகளை அதிகரிக்கவேண்டும்.

"காங்கேசன்துறையிலிருந்து கிளிநொச்சி வரையிலான புகையிரதப்பாதை இருபாதைகளாக அமைக்கப்பட்டு ரயில் சேவை விஸ்தரிக்கப்படவேண்டும். (கெ-கு)


விசேட
வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினால் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி.

BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்
25, போஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

Mel Ads

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம்!
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும்
ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும்
உங்களுக்கு ரூபா 500/- சன்மானம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் 'இராசு'வினுல் ஆரம்பிக்கப்பட்ட

# அபிவிருத்தித்திட்டங்கள்சில நடக்காத காரணம்என்ன?

(மட்டக்களப்பு)

பிராந்திய அபிவிருத்தி அமைச்சரும் மட்டுநகர் முதல்வருமான திரு. செல்லையா இராசதுரையினுல் ஆரம்பிக்கப்பட்ட சில அபிவிருத்தித் திட்ட வேலைகள் அத்திவாரக் கல்லுடனேயே காணப்டுகின்றன.

பணம்ஒதுக்கப்படாததா அல்லது அதிகாரிகளின் அசட்டைத்தனமா இதற்குக் காரணம் என அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள்.

கடந்த யூலைமாதம் 7-ம் திகதி திரு. இராசதுரை பல அபிவிருத்தித் திட்டங்களை மாவட்ட அமைச்சர்களினுல் ஆரம்பித்து வைத்தார். இத்திட்டங்களில் சில முடிவு பெற்றுள்ளன. சில நடைபெற்ற வண்ணம் உள்ளன. அதே நேரத்தில் பல ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றன.

கொழும்பு மாவட்ட மந்திரி திரு. மல்லவராச்சியினுல் அத்திவாரக்கல் நாட்டப்பட்ட நரிப்புலித் தோட்டம், வவுணதீவு சிறுகைத்தொழில் நிலையம் திறக்கப்பட்டுள்ளன. நெல்லிச்காடு, இராசதுரை நகர் ஆகிய இடங்களில் தற்போது கட்டப்பட்டுவருகின்றன. அதே நேரத்தில் மகிழவெட்டுவான் பிரசவமனை, மோர்சாப்பிட்டி பாடசாலை, மட்டுநகர் மீன்சந்தைபோன்றவற்றின் வேலைகள் அடிக்கல்லுடன்தான் உள்ளது.

நுவரெலியா மாவட்ட மந்திரி செல்வி ரேணுகா கேரத்தினுல் ஆரம்பிக்கப்பட்ட சத்துருகொண்டான் நெசவுநிலையம் தன்னுமுனை வீடமைப்புத் திட்டம், பட்டுநகர் பஸ் நிலையம் போன்றவற்றின் வேலைகள் நடைபெற்றுள்ளன. அதே நேரத்தில் சத்துருகொண்டான் பாடசாலை வேலைகள் புதூர் கேணி புனரமைப்பு வேலைகள் அடிக்கல்லுடன்தான் உள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட மந்திரி திரு. எம் கனகரத்தினத்தால் ஆரம்பித்துவைக்கப்பட்ட புன்னச்சோலை சலவைப்பேட்டை. அம்பாறை மாவட்ட மந்திரி திரு. ரி. தயாரட்ணவினுல் ஆரம்பித்து வைக்கப்பட்ட புல்லுமலைபிரசவமனைக்கான வேலை என்பன அத்திவாரக் கல்லுடன்தான் உள்ளன.

இதுதொடர்பாக பிராந்திய அபிவிருத்தி அமைச்சரின் காரியாலயத்துடன் தொடர்புகொண்டபோது சகலவற்றிற்கும் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது, அதிகாரிகளின் அசட்டைதான் காரணம் எனவும் முடியாத இவ்வேலைகள் விரைவில் ஆரம்பிக்கவேண்டிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்தாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (கு)

---

இறைச்சிக்கடை டென்டர் முறை:

## 3 வருடத்திற்காவது பின்போடுமாறு யாழ். மாநகரசபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இறைச்சிக்கடைகளைக் கேள்விப்பத்திர மூலம் விடும் நடைமுறையை யாழ்ப்பாண நகரைப் பொறுத்தவரை குறைந்தது 3 வருடகாலத்திற்காவது ஒத்திவைக்க வேண்டு மென்று உள்ளூராட்சி அமைச்சரிடம் கோரும் தீர்மானம் யாழ். மாநகராட்சி மன்றத்தால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது விடயமாக மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி இம் மாதம் 23-ம் திகதி சபை மீண்டும் கூடி ஆராயும்.

யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற யாழ் மாநகரசபைக் கூட்டத்தில் கடந்த 19- 12- 74-ல் நடைபெற்ற கூட்ட அறிக்கை சபையின் அங்கீகாரத்திற்கு விடப்பட்ட சமயம் இறைச்சிக் கடைகளை தற்போதைய நடைமுறைக்குப் பதில் கேள்விப்பத்திர மூலம் விடவேண்டுமென்ற உள்ளூராட்சி மன்ற அமைச்சரின் சுற்றறிக்கையை அமுல் நடத்துவதை ஒருமாத காலம் பின்போட வேண்டும் என்று அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குத் திருத்தமாக பின் கண்டபிரேரணையை ஜனுப் ஆர். எம். இமாம் கொண்டு வந்தார்.

திருத்தப் பிரேரணையை ஜனுப் இமாமம் பிரேரித்துப் பேசுகையில் கூறியதாவது

நான் சார்ந்து நிற்கும் சமூகத்தின் பிரச்னையாக இறைச்சிக்கடைப் பிரச்னை இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் 20 இறைச்சிக்கடைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கடையிலும் 5 பேர் வளர வேலை செய்கிருர்கள் அமைச்சரின் செயலால் 20 கடைகளில் வேலைசெய்யும் 100 தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதுடன் அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 500 பேர் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்து இதுபோன்ற வரும் இவ்வேளையில் கேள்விப்பத்திர முறை நடைமுறைக்கு வந்தால் இறைச்சியின் விலைதான் அதிகரிக்குமே தவிர இறைச்சிவிலை குறைவதற்கு இடமில்லாது போய் விடும். (கொ)

---

## ராம் தலைமையில் சபை கூடியது

(புதுடில்லி)

இந்தியப் பாராளுமன்றத்தின்(லோகசபை)ஒருவாரகால கூட்டத்தொடர் தற்கா லிக சபாநாயகர் திரு. ஜெகஜீவன் ராம் தலைமையில் ஆரம்பமானது.

கூட்டம் ஆரம்பமாகியதும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் முதலில் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் அவரைத் தொடர்ந்து மந்திரிசபை உறுப்பினர்களும் பதவிப்பிரமாணம்செய்து கொண்டனர்.

லோகசபையின் புதிய சபாநாயகரை சபை இன்றுதெரிவு செய்யும், புதிய அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை ராஷ்டிரபதி திரு. நீலம் சஞ்சிவரெட்டி இன்று சபையில் நிகழ்த்துவார். [கு]

......

## ஊழியர்கள் வேலைநிறுத்தம்

(மன்னுர்)

மன்னுர் மாவட்ட பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தைச்சேர்ந்த கூட்டுறவுத் தொழிலாளர் சங்கத்தொழிலாளர்கள்இன்று அடையாள வேலைநிறுத்தம் செய்யவுள்ளனர்.

உயிலங்குளம் மாந்தை தெற்கு ப,நோ.கூ. சங்க இயக்குநர்சபை தான்தோன்றித்தனமாக நடப்பதை எதிர்த்து பல கோரிக்கைகளை முன் வைத்து இவ்வடையாள வேலை நிறுத்தம் நடைபெறவுள்ளது. (கு)

---

## 'ஆத்மஜோதி' முத்தையாவுக்கு சென்னையில் கௌரவம்

சென்னை, ஜன.20

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா, முத்தையாவுக்கு சென்னையிலுள்ள தாம்பரம் இறைபணிமன்றத்தின் ஆதரவில் பாராட்டுவிழாஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது.

வள்ளிமலை மௌனகுரு சுவாமிகளின் சீடர் குருஜீ சுந்தரராமன் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்.

திரு. குருஜீ சுந்தரராமன் விழாவிற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில், 'ஆசிரியர் திரு. நா.முத்தையா தேயிலைத் தோட்ட மக்கள் மத்தியில் ஸ்ரீலங்காவில் செய்துவரும் அரிய சேவைகளை தாம்நேரில் கண்டு மகிழ்ந்ததாகவும், தூரகிழக்கு நாடுகளில் ஆசிரியர் ஆற்றி வரும் சேவைகளைப் பாராட்டாமல் இருக்கமுடியாது என்றும் கூறினுர்.

தாம்பரம் இறைபணி மன்றத்தின் தலைவர் திரு.த.ஏகாம்பரம் வரவேற்புரை கூறினுர்.

'தினமணி' உதவி ஆசிரியர் திரு. எம்.பி. ஸ்ரீரங்கம், பெரியார் யோகிராஜன், திரு. சௌமியநாராயணன்ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

விழா ஆரம்பத்தில் கலைமாமணி திரு. ஸ்ரீராமுலு மிருதங்கம் வாசிக்க, திரு.டி.ஆர்.கண்ணன் ஹார்மோனியம்வாசிக்க இறைபணி மன்றத்தின் திருப்புகழ் இன்னிசை நடைபெற்றது.

திரு. நா. முத்தையா பாராட்டுதல்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில்; பாரதநாடும் - ஸ்ரீலங்காவும் பண்டுதொட்டே கலைகலாச்சாரத்தால் ஒன்றுபட்டிருக்கிறது என்றும் சத்சங்கத்தினுல் மக்கள்வாழ்வு புனிதமடைந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

திரு. கே. கோவிந்தசாமி நன்றிகூறினுர். கடந்த ஒரு மாதமாக சென்னையிலும் காஞ்சி மாவட்டத்திலும் சமயவுரைஆற்றிவரும் ஆத்மஜோதி ஆசிரியரின் சொற்பொழிவைக் கேட்பதற்குத் தினமும் பெருந்தொகையான மக்கள் ஆர்வம் காட்டித் திரளுவதாக நமது சென்னை நிருபர் தெரிவித்திருர்.

---

## இராஜராஜேஸ்வரன் மீதான வழக்கு இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான்நீதிமன்றத்தில் 1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தோல்வியடைந்த சுயேச்சை வேட்பாளராயிருந்த திறுைய்வுக்கழகத் தலைவர் சட்டத்தரணி ராஜராஜேஸ்வரன்தங்கராஜாவுக்கு எதிராக சட்டமாஅதிபரால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு, இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

இவ்வழக்கில் அவர்தேர்தல் சட்டத்தின்படி தேர்தல்நடந்த ஒருமாதகால எல்லையான 1977 ஆகஸ்ட் மாதம் 25ந் திகதிக்குள் தனது தேர்தல் கணக்குகளை முறையே யாழ்ப்பாணத்துத் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கத்தவறிவிட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் குற்றம்காணப்பட்டால்; திரு. இராஜ இராஜேஸ்வரன் தங்கராசாவுக்கு குற்றம் காணப்பட்டதிலிருந்து மூன்று வருடங்களுக்கு ஒரு பொதுத்தேர்தலிலும் பங்கு பெற முடியாத சட்ட விளைவு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## மட்டக்களப்பு புதிய பொலிஸ் நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில்அமைக்கப்பட்டுள்ள புதிய பொலிஸ் நிலையம், அடுத்த மாதம் பிரதி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் திரு. ரி. பி. வேரப்பிட்டியாவினுல் திறந்து வைக்கப்படவுள்ளது.

தற்போதைய பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துவரும் இப்புதிய பொலிஸ் நிலையத்துடன், குடும்பவிடுதி, தனியார் விடுதி, பொலிஸ் அத்தியட்சகர்அலுவலகம், விளக்கமறியல் கூடம் என்பன அமைந்துள்ளன.

இப்பொலிஸ் நிலைய நிர்மான வேலைகள் ஏற்கனவே கட்டிடத்திணைக் களத்தினுல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனினும்விரைவில்திறக்கப்படவேண்டுமென்பதற்காக விடுதி அமைக்கும் வேலைகள் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

---

# மன்னர் செய்திகள்

(மன்னுர்)

இரண்டு மாத காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நானாட்டான் பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐந்து மைல் நீளமான இப்பாதையை கட்டைக்காடு கிராம மக்களும் மற்றும் அயல் கிராம மக்களும் ஒன்றிணைந்து சிரமதானம் மூலம் செப்பனிட்டனர். இதனைத் தொடர்ந்து நானாட்டான் பஸ் சேவை மீண்டும் ஆரம்பித்தது.

### விளையாட்டரங்கு

எருக்கலம்பிட்டி அரசினர் முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலயத்தின் விளையாட்டரங்கு விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

மன்னுர்விளையாட்டரங்கினை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது இதற்குத் தேவையான காணிகளை விளையாட்டரங்கின் வடமேற்குப் பக்கமாக சுவீகரிக்கப்படவுள்ளது,

சுவீகரிக்கப்படும் காணியின் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு வழங்கப் டும். இதற்கென 5000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

### விறகு ஆலை

மன்னுரில் உள்ள விறகுத் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக, மன்னுரில் விறகு ஆலை ஒன்றை நிறுவுமாறு மரக் கூட்டுத்தாபனத்திடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

### இலவச வைத்தியசாலை

எருக்கலம்பிட்டி கிராமச் சபையால் நடத்தப்படும் இலவச ஆயுள்வேதவைத்தியசாலையில் மருந்து எடுப்போரின் தொகைஅதிகரித்துள்ளது.

### இலவச ஆடை

முதலாம், இரண்டாம் வகுப்புப் படிக்கும் மாணவர்களுக்கு இலவச ஆடை வழங்குமாறு அண்மையில் மன்னுருக்கு விஜயஞ்செய்த கல்விச் சேவைகள் அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது.

### மா தட்டுப்பாடு

மன்னுரில் மாவுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உணவுக் களஞ்சியத்திலிருந்து பேக்கரிகளுக்கு மட்டும் மாவிநியோகம் நடைபெறுகிறது. இதன் எதிரொலியாக இடியப்பம், பிட்டு போன்றவற்றை விற்பனைசெய்வோர் மிகவும் கஷ்டமடைந்துள்ளனர். இதனுடன் கடைகளிலும் காலை உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

### சமாதானத்தீர்வு

பேசாலை கரிசல் ஆகிய இரு சமூகதிற்கு மிடையில் அண்மையில் நடைபெற்ற மோதல் சமாதானமாக 'மீண்டும் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பேசாலையில் கரிசல் மக்களுக்குச் சொந்தமான கடைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

### தேங்காய் ரூ.2,00!

பேசாலையில் மாவுக்கும் தேங்காய்க்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு தேங்காயின் விலை 2 ரூபா முதல் 2- 50 சதம் வரை விற்பனை செய்யப்படுகிறது. மா தட்டுப்பாட்டால் ஹோட்டல்களில் எந்தவித உணவும் கிடைப்பதில்லை. சில வேளைகளில் தேநீரைத் தவிர வேறு எந்த உணவும் கிடைப்பதில்லை இதனுல் வெளியூர் தொழிலாளர்கள் மிகவும் சிரமம் அடைகின்றனர்.

---

## அடம்பனில் ஆரம்பநீதிமன்றம்

]மன்னுர்]

'கிராமப்புறங்களில் வாழும் மக்களது சிரமங்களை நீக்குவதற்காகவே கிராமங்கள் தோறும் ஆரம்பநீதிமன்றங்கள் திறக்கப்பட்டுவருகிறது.

இவ்வாறு அடம்பனில் ஆரம்பநீதிமன்றம் ஒன்றைத் திறந்துவைத்தநீதவான் திரு.சிதம்பரநாதன் பேசுகையில் கூறினுர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானை பாதுகாக்க அமெரிக்கா தயார்!

# ராணுவபலத்தை அதிகரிக்க கார்ட்டர் உத்தரவு

வாஷிங்டன் ஜன. 21

பாகிஸ்தான் எதிர் நோக்கும் எந்த ஒரு பிரச்னையிலிருந்து அதனைப் பாதுகாக்க அமெரிக்கா இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்

தொலைக் காட்சியொன்றுக் களித்த விசேட பேட்டியொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ள திரு. கார்ட்டர்; ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனின் தலையீட்டினல் பாகிஸ்தானுக்கு ஏற்படும் ஆபத்தை சமாளிப்பதற்கு அமெரிக்கா இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள தயாராக இருப்பதாக திட்டவட்டமாகக் கூறினுர்.

இந்து சமுத்திரத்தின் வட பகுதியிலும் பாரசீகக்குடாவிலும் அமெரிக்காவின் இராணுவப் பலம் மேலும் அதிகரிக்கப் படும் என்றும் திரு. கார்ட்டர் கூறினுர்.

## கவாஸ்கர் ராஜினுமா

(சென்னை)

இந்திய கிரிக்கட் குழுவின் தலைவர் திரு. சுனில் கவாஸ்கர் தமது தலைமைப் பொறுப்பை ராஜினுமாச் செய்துள்ளார்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 5-வது கிரிக்கட்டெஸ்ட்டில் இந்தியா அமோக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து கவாஸ்கர் ராஜினுமாச் செய்தது கிரிக்கட் ரசிகர்கள் மத்தியில் ஏமாற்றத்தையே தோற்றிவித்துள்ளது. (கு)

## மதுரை சோமுவுக்கு பட்டமளிப்பு

(மதுரை)

கர்நாடக இசை வித்துவான் திரு, சோமசுந்தரத்துக்கு (மதுரை சோமு) மதுரைஸ்ரீ சத்குரு சங்கீத சமாஜம் மதுரை கலாபிரவீன' என்றபட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது. (கு)

## யப்பானிலும் தலையிட ரஷ்யா முயல்கிறது
### சீனப்பிரதமர் குற்றச்சாட்டு

பீக்கிங், ஜன. 21

சோவியத் யூனியயன் யப்பானிலும் தலையிட முயற்சிப்பதாக சீனப் பிரதமர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் புரட்சியில் தலையிட்டது போன்று யப்பான் அரசியலிலும் தலையிட சோவியத் யூனியன் முயல்கிறது என்று தெரிவித்துள்ள சீனப்பிரதமர் அவ்வாறான நிலைமை தோன்ருமலிருப்பதற்கு யப்பான் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

## ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வேலை பெற்றுத்தருவதாகக் கூறி, இளைஞர்களிடமிருந்து ஆயிரக்கணக்கனா ரூபா பெற்று மோசடிசெய்ததாகச் சந்தேகத்தின்பேரில் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர்,

வவனியாவிலுள்ள பம்மைமடுவைச்சேர்ந்த செல்வராசா என்பவரே இவ்வாறு இளைஞர்களிடமிருந்து பணத்தைப் பெற்று மோசடிசெய்தவராவர்

செல்வராசாவைக் கைது செய்த வவனியாப் பொலிசார், சந்தேகநபரிடமிருந்து பல பாஸ்போட்டுகளையும், பணம் கொடுக்கல்வாங்கல் சம்பந்தமான பல தஸ்தா வேஜூகளையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணப் பொலிஸிலும், கொழும்புப் பொலிஸிலும் புகார் செய்யப்பட்டுள்ளதாக விசாரணையின்போது தெரிய வந்துள்ளது. வவனியாப் பொலிசாரால் கைதுசெய்யப் பட்ட சந்தேகநபரை யாழ்ப் பாணப் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர். (கொ)

இதே வேளையில் சோவியத் யூனியனுக்கு உளவு வேலை பார்த்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் மூன்று பேர் யப்பானில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர். (கு)

# அரங்கசுவாமி
## மீண்டும் தி. மு. க. வில்!

சென்னை, ஜன 21

தமிழ்நாடு சட்டசபை அங்கத்தவர் திரு. கே. அரங்கசுவாமி, நேற்று மீண்டும் தி, மு. கழகத்தில் சேர்ந்துகொண்டார்!

முன்னர் தி. மு. கழகத்திலிருந்த இவர் கடந்த அக்டோபர் மாதம் அ. இ. அ. தி. மு. கழகத்தில் சேர்ந்தார். நேற்று கலைஞர் கருணநிதி முன்னிலையில் தி. மு. க. வில் சேர்ந்து கொண்டார்.

'' மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்று, ராஜினுமா செய்ய திரு. எம். ஜி. ராமச்சந்திரன் முன் வராததினுலேயே நான் அ. இ. அ. தி. மு. கழகத்திலிருந்து வெளியேறுகின்றேன்'' என்று திரு. அரங்கசுவாமி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மாஸ்கோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக்:

# அமெரிக்க விளையாட்டு வீரர் கலந்துகொள்ளக்கூடாது!
## அதிபர் கார்ட்டர் கோரிக்கை

வாஷிங்டன், ஜன. 21

மாஸ்கோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளக்கூடாது என்று அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் அமெரிக்க விளையாட்டு வீரர்களைக் கேட்டிருக்கிருர்.

ஆப்கானிஸ்தானில் குவிக்கப் பட்டிருக்கும் சோவியத் யூனியனின் துருப்புக்கள் ஒரு மாத காலத்துக்குள் திருப்பிஅழைக் கப்படாவிட்டால் இவ்வருட நடுப்பகுதியில் மாஸ்கோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை அங்கு நடத்தக் கூடாது என்றுப் அல்லது அதனை ரத்துச் செய்யவேண்டும் என்றும் சர்வதேச ஒலிம்பிக் சபையிடம் வற்புறுத்துமாறு அமெரிக்க ஒலிம்பிக் சபையிடம் அதிபர் கார்ட்டர் கோரியுள்ளார்.

இதே வேளையில் சர்வதேச ஒலிம்பிக் சபையின் தலைவர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் ஒலிம்பிக் போட்டிகள் அரசியல் கலப்பற்றவையென்றும் எக்காரணம்கொண்டும் ஒலிம்பிக் போட்டிகள் மாஸ்கோவிலிருத்து வேருெரு இடத்துக்கு மாற்றப்பட மாட்டாது என்றும் கூறியுள்ளார். (கு)

ஆஸாமில் ஊரடங்கு: 6 பேர் பலி!

# எதிர்க்கட்சியினரை சந்திக்க பிரதமர் இந்திரா விருப்பம்

புதுடில்லி, ஜன. 21

ஆஸாம் மாநிலத்தில் இடம் பெற்றுவரும் கலவரங்களைச் சமாளிப்பதற்காக அங்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் நேற்று இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களில் ஆறுபேர் உயிரிழந்தனர்.

இதே வேளையில் அங்கு ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியுள்ளார்.

ஆஸாம் மாநில வாக்காளர் பட்டியலிலிருந்து வெளிநாட்டவர்களின் பெயர்களை நீக்க வேண்டும் என்றுகோரி அங்கு இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களில் இதுவரை 20-க்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து அங்கு முழுநேர ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்து வருகின்றது.

மக்களின் அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்காக இன்று மட்டும் 6 மணித்தியாலங்கள் ஊரடங்கு ரத்துச் செய்யப்பட்டுள்ளது. (கு)

## கபில்தேவுக்கு 18 ஆயிரம் ரூபா

(சென்னை)

சென்னையில் நடைபெற்ற இந்திய பாகிஸ்தான் கிரிக்கட் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு பெருமளவு நிதி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சகலதுறை வீரராக இப் போட்டியில் தெரிவுசெய்யப் பட்ட இந்தியக் கோஷ்டியின் இளம்வீரர் கபில்தேவுக்கு 18 ஆயிரம் ரூபா அன்பளிப் பாக வழங்கப்பட்டுள்ளது.(கு)

# இந்திராகாந்தி ரஷ்ய ஆதரவாளரா?
## அவரே தெளிவுபடுத்துகிருர்

(புதுடில்லி) [illegible]

''நான் ஒரு ரஷ்ய ஆதரவாளர் என்று எதிர்க்கட்சினர் குற்றம் சுமத்துகின்றனர். நான் சோவியத் யூனியனின் ஆதரவாளருமல்ல, அமெரிக்காவின் ஆதரவாளருமல்ல. நான், இந்தியாவின் ஆதரவாளர்'' என்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று ஆக்ரோஷமாகக் கூறினுர்.

ஆப்கானிஸ்தான் நிலைமை குறித்து எதிர்க்கட்சித்தலைவர்களுடன் நேற்று சுமார் 45 நிமிடநேரம் ஆலோசனை நடத்தியதன் பின்னரே திருமதி காந்தி மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

''நான் ஒரு சோவியத் ஆதரவாளர் என்று எதிர்க்கட்சியினர் கருதுவதாகத் தெரிகிறது. அதற்காகவே இதனை இங்கு [illegible] தெரியப்படுத்துகின் [illegible] என்றும் திருமதி [illegible] இரா [illegible]

## இன்றைய பலன்

தை மாதம் 8-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(22-1-1980)

மேடம்: குடும்பநலனில் புதிய உத்வேகம் பிறக்கும். அமைதியுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள். தானியவிருத்திக்குமிடமுண்டு.

இடபம்: ஆத்திர உணர்ச்சியால் மோதல்களுக்கு இடமளிக்கும். இளமை நினைவுகளால் வேதனைப்படுவீர்கள். மனத்திடமே மருந்தாகும்.

மிதுனம்: தடைப்பட்ட காரியங்கள் இன்று முடிவு பெறும். அன்னை வழிச்சுகச் செளகரியம் ... சய்திக்குமிடமுண்டு. விளை பொருள் விருத்திக்குமிடமுண்டு.

கடகம்: பூமி விவகாரம் சமரச முடிவுபெறும். செய் தொழில் சிறப்புமுண்டு. வெளியூர்ச் செய்தியும் உண்டு. மகிழ்ச்சியான தினம்.

சிங்கம்: துன்பத்தின் நிழல் உங்களைப் பின் தொடரும். அன்னியவாசம் அமைதிக்கு உலை வைக்கும். கடற்ருெழிலாளர்கள் அவதானம்வேண்டும்.

கன்னி: குடும்பத்தில் குதூகலம் தவழும். தாம்பத்திய வாழ்வில் நன்மையான சம்பவங்கள் இடம்பெறலாம். எதிலும் தூய்மையை காண விரும்புவீர்கள்.

துலாம்: வியாபாரிகளுடன் பகைக்க நேரிடலாம். வீண் செலவுகள் ஏற்படும். குடும்பப் பிணியும் தோன்றும்.

விருச்சிகம்: சிலருக்குஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் பிறக்கலாம். பெற்ருேரின் ஆதரவும் அவசியம் கிடைக்கும். தொழிலிலும் வெற்றியுண்டு.

தனுசு: செய்தொழிலால் சிறப்படைவதற்கிடமுண்டு. புதுமனை பற்றிய விடயமும் ஆலோசிக்கவரும். சிலர்க்கு தலைமைஸ்தானமும் கிடைக்க வரும்.

மகரம்: தாராள குணத்தின் மூலம் தனமும் செலவாகலாம். பொருள் வரவும் கிடைக்கலாம். தித்திக்கும் செய்தியும் உண்டு.

கும்பம்: வேண்டாத விளைவுகள் தலைதூக்கலாம். பணம் பறிபோவதற்குமிட மேற்படலாம்வாய்வுக் கோளாறினுலும் பாதிக்கப்படுவீர்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரன் யாழ்ப்பாணம்
முத்துராமன் - விஜயகுமாரி
ஸ்ரீதரின்
கொடிமலர்
(புதிய பிரதி)

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி: 6-15, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம்.ஜி.ஆர்.-வாணிஸ்ரீ
ஊருக்கு
உழைப்பவன்

3-வது ஜனசமுத்திர வாரம்
REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
JAMES COBURN. YORK SUSANNAH
SKY RIDERS
குறிப்பு :- காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் ரிக்கற்றுக்கு முந்துங்கள்.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
எங்கள் தங்க ராஜா (புத்தம்புதிய பிரதி-கலர்)

லிடோ (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-15, 4-15, 7-00, & 9-30
போன்: 7693
Zoltan Hound of Dracula

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
கலைஞர் கருணாநிதியின்
பூம்புகார் (புதிய பிரதி)

சாந்தி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
போன்: 7642
26-1-80-ல் 100-வது வெற்றித்தின விழா!
கடைசி வாரம் டாக்ஸி டிரைவர் - கலர்
இத்துடன் 'அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரைப் பவனி'' -நேர்முக வர்ணனை கலைஞர் மு. கருணாநிதி.

ஸ்ரீதர் (யாழ். நகர்)
கடைசி வாரம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30, 6-15, 9-45.
சிவாஜி, சுஜாதா, நாகேஷ், விஜயகுமார்
தீபம்
வெள்ளிவிழாச்சித்திரம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தினசரி: 10-30, பி. ப. 2-30, 6-30, 9-30
ஏ. வி. எம். ராஜன், ஜெயசித்திரா, ஜெய்கணேஷ், அசோகன்
தாயில்லா குழந்தை

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா, தேங்காய் சீனிவாசன் நடிக்கும்
5-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி மங்கையர் கூட்டம் மடை திறந்த வெள்ளம் போல் அலை மோதும் காரணம் யாதோ?
மங்கையர் திலகம் சாவித்திரியுடன் நாகேஸ்வரராவ் சேர்ந்து நடித்த
தேவதாஸ் தான் காரணம்
காட்சிகள் குறித்த நேரத்திற்கு முன்பே தொடங்குவதால் தங்கள் ரிக்கட்டுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

## நாடும் நடப்பும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரயாணத்தை சீராக்க வேண்டாமா?

ஃ ஃ ஃ

''சவால் சமுதாயத்துக் கல்ல-நேர்மைக்கு!'' என்று தலைப்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி நல்லையா என்னும் வாசக அன்பர் எழுதியுள்ள கடிதம் இது:-

14 வயதுமாணவன். கையில் ஒரு புத்தகம். கடையில் நின்ருன். பொருட்களைப்பார்த்தான். 10 ரூபா தாளை என்னிடம் மாற்றிக் கேட்டான். கொடுத்தேன். நான் மேசை மீது எனது பணத்தை (400/- கட்டு) வைத்துவிட்டு வேறு ஒரு அவதானத்திலிருந்தேன். இருநிமிட அலுவலின்பின் நான் மேசைக்கு வந்தபோது அந்தமாணவனுமில்லை- பணக்கட்டும் (400/-) மறைந்துவிட்டது. நெடிதுயிர்த்து இடிந்துபோனேன். கஷ்டப்பட்டு- இரத்த வியர்வை நிலத்தில் சிந்தி- உடலையும் உள்ளத்தையும் மாய்த்து உழைத்த பணமல்லவா? வாய்விட்டு அழாக்குறைதான்! அதுவும் இருமாத வாடகை பாக்கிப்பணமாக- இன்னும் 200/- சேர்த்து 600/- ஆகக் கொடுக்கப்படவேண்டிய பணம் அது. துடியாய்த்துடித்தேன்.

பள்ளிவயது மாணவனுக்கு இந்த(வக்கிரப்)புத்தியா என்று மனம் வெதும்பி நொந்தேன். சரி, மாணவனை விடுவோம்! வீட்டுப் பெரியவர்களின் கடமை என்ன? இங்குதான் எனது சவால்!

சிறுவனொருவன் கையில் காசு (அதுவும் இவ்வளவு தொகையாக) கண்டபடி- மனம் போனவாக்கில் புழங்குவதாயின் பாராமுகமாயிருக்கலாமா? பெற்ரேர்- ஆசிரியர் உயர் உத்தியோகஸ்தர்- நேர்மை- கண்ணியம்- பொறுப்புணர்ச்சியுள்ளவர்களைக்கொண்ட சமுதாயத்துக்கு இச்சிறுவனின் செயல் சஞ்சலம் நிறைந்த சிந்தனையை முள்ளாகக்குத்தக் கூடாதா? இங்குதான் என் சவால் தைக்கிறது.

இது 400/-க்குப் பதிலாக ரூ. 4,000/-, 40,000/- பணக்கட்டாக இருந்திருந்தால்...?

எப்பகுதி மாணவனோ? எந்தப்பள்ளிக்கூடமோ? எவர் பெத்த புத்திரனோ?

விபரம் கிட்டினுல் ஈழநாடு காரியாலயத்துக்குக் கொடுக்கலாம்!

ஃ ஃ ஃ

எவ்வளவு மனவேதனை.

--ஊர்சுற்றி

## மிளகாய்க்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பசளை (மாட்டுச்சாணம்) கடந்த 7, 8 மாதங்களாக விலை ஏறிக்கொண்டுபோவதன் காரணமாக மிளகாய் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது, இந்த விலையேற்றத்தை மனதிற்கொண்டு அரசாங்கம் ஒரு வரியான அடிமட்ட விலையை நிர்ணயிக்காவிட்டால், கமத்தொழிலின் எதிர்காலம் இருண்டதாகவே காணப்படும். தேசிய விலை நிர்ணய ஆணைக்குழுவினர் இந்த விசாரணையின் முடிவில் மிளகாய்க்கு ஒரு நியாயமான விலையை நிச்சயப்படுத்தப் படவேண்டுமென்ற வேண்டுகோள் எவ்வளவு நேர்மையானது என்பதை உணருவார்கள்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 4-45, 7-15, & 9-30
REVENGERS

# "இலவச நூல் வழங்குமாறு சபையில் எடுத்துரைத்தேன்"

## புத்தக விநியோக விழாவில் அமைச்சர் 'இராசு'

(மட்டக்களப்பு)

''இலவசக்கல்வியுடன்இலவச பாடப்புத்தகமும் வழங்கினுல் நமது கல்வி மேலும் வளர்ச்சியடையும் என்று நான் ஒரு தடவை பாராளுமன்றத்தில் எடுத்துரைத்தேன்''

இவ்வாறு மட்டுநகர் முதல் வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் பாடசாலையில் இலவசபாடநூல்களை மாணவருக்கு வழங்கும் வைபவத்தில் பேசுகையில்தெரிவித்தார்.

அதிபர் திரு. ப. பாக்கிய ராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு அமைச்சர் பாண்ட்வாத்தியம் வாசிக்கப்பட்டு மாணவிகள், பெற்ரேர்கள், பழையமாணவிகள் சகிதம் வரவேற்கப்பட்டார். அமைச்சர் மேலும் பேசுகையில்: 'கல்வி அழியாத செல்வமாகும். பிள்ளைகள் தங்களின் பெற்ருேர்கட்கு மாசு ஏற்படுத்தாமல் நடக்கவேண்டும். இலவச கல்வியில் இந்நாட்டின் கல்வித்தரம் முன்னேற்றமடைகின்றது.

''ஜனுதிபதி ஜெயவர்த்தன கல்விக்காக இம்முறை வரவு- செலவுத்திட்டத்தில் 13கோடி ரூபாய் விசேஷமாக ஒதுக்கினுர். இத்தொகை இலவச பாடநூல்கட்கு ஒதுக்கப்பட்ட தொகையாகும். இப்பாட நூல்களை அச்சிட்ட அச்சகக்கூட்டுத்தாபன ஊழியர்கள் அல்லும் பகலும் பாடுபட்டு, வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் பட்ட கஷ்டம் நம்கஷ்டமெனக்கருதி நாம் நல்ல கல்வியைக் கற்று சமுதாயத்தின் நற்பிரஜையாக வாழவேண்டுமென்ருர். (கு)

# 'இராசு'வின் கூட்டங்களில் கூட்டணிப் பிரமுகர்கள்

(மட்டுநகர்)

மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை கலந்து கொள்ளும் வைபவங்களில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சட்டத்துறை செயலாளரான திரு சாம்தம்பிமுத்து உட்பட பலர் கலந்து கொள்வதை காணக்கூடியதாக உள்ளது.

அண்மையில் நடைபெற்ற இலவச விடுகளைக் கையளிக்கும் வைபவம் எல்லைவீதியில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் அமைச்சரும் திரு. சாம் தம்பிமுத்துவும் கலந்து கொண்டு உரையாற்றினுர்கள்.

அதற்கு பின்பு புனித சிசிலியா பெண்கள் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் ஒன்றில் ஒன்றில் திரு. சாம் தம்முத்தும், அவரது பாரியாரும் தமிழ் மகளிர் பேரவை செயலாளருமான திருமதி கலாதம்பிமுத்தும் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கழி. (கு)

## மாதர் சங்க நிர்வாகிகள்

[மன்னுர்]

எருக்கலம்பிட்டி மாதர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. எருக்கலம்பிட்டி கிராமசேவையாளர் ஜனுப் எம். வை. எம். அஸீஸ் உரையாற்றினுர்.

இக்கூட்டத்தின்போது நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவி-ஜனுபா கரீமா கபூர், உப தலைவி- ஜனுபா றபீக்கா சர்யுத்தீன், செயலாளர்- ஜனுபா ஆசீஸா சகாப்தீன், பொருளாளர்-ஜனுபா ஹம்தா ஹமீது. (கு)

## கம்யூனிஸ்ட்,.:

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கவிருப்பதை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். நகரக்கிளை வன்மையாகக்கண்டிக்கிறது.

மேற்கண்டவாறு கூறும் தீர்மானம் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

(கொ. அ)

## இன்றைய பலன்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

மீனம்: தனதானிய நஷ்டத்துடன் பூமிவிவகாரமும் தலைதூக்கலாம் தொழில் புரியும் இடத்தில் அவதானம் விரும்பத்தக்கது. சுமாரானநாள்.

சேதிடக் கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

## மழையால் நன்மை

(மன்னுர்)

அண்மையில் பெய்த கடும் மழை விவசாயிகளுக்கு பெரிதும் நன்மையளித்ததுபோல் மன்னுர் மாவட்டத்தில் இப்போது இரவில் பெய்துவரும் கடும் பனியும் விவசாயிகளுக்கு நன்மையை அளித்துவருகிறது. (கு)

......

## கும்பாபிஷேகம்

(திருமலை)

தம்பலகாமம் ஸ்ரீ ஹம்சகமனும்பிகாதேவி ஆதிகோணநாயகசுவாமி தேவஸ்தான மகாகும்பாபிஷேகம், இம்மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறும்.

கும்பாபிஷேக கிரியைகளை 50க்கு மேற்பட்ட சிவாச்சாரியார்கள் நிறைவு செய்து வைப்பார். கும்பாபிஷேக தினங்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அருளுரை நிகழ்த்துவார். (கெ)

......

## யாழ். ஐ. தே. க. பகிரங்கக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். ஐக்கிய தேசியக் கட்சியக்கட்சியின், பகிரங்கக் கூட்டம், இன்று மாலை கட்சிப் பணிமனையில் ஐ. தே. க. மாவட்டக்குளுத்தலைவர் திரு. க. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில், வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, பிரதம பேச்சாளராகக்கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்.

அமைச்சரை யாழ்.மாவட்ட ஐ. தே. க. பிரமுக கள் யாழ். வாடி வீட்டுச்சந்திருந்து கட்சிப் பணிமனைவரை ஊர்வலமாக, அழைத்துச்செல்வதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (கெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பொருள்களின் இறக்குமதி மூலம் விவசாய உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது!"

## யாழ். செயலக மகாநாட்டில் அமிர்தலிங்கம் கவலை

(யாழ்ப்பாணம்)

''மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் நியாயமான விலைக்கு கிடைக்கக்கூடியதாக, விற்பனை நிலையங்கள் எங்கும் ஆரம்பிக்கப்படவேண்டும். மக்களுக்கு கஷ்டமின்றி உணவுவகை கிடைக்க வழிசெய்யவேண்டும்''

யாழ் அரசாங்க செயலகத்தில் நடந்த மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது. இன்று காலை, சீனியின் விலை 4 ரூபா 50 சதமாகவும் மாவின் விலை ஒரு ரூபா ஐம்பது சதமாகவும் பாணின் விலை ஒரு ரூபா 35 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதால் மக்கள் மேலும் கஷ்டத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்,

''அத்தியாவசிய உணவுப் பொருட்கள் நியாயமான விலைக்கு கிடைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். பரிசோதனைக் குழுவினர் துரிதமாக செயல்பட்டு பதுக்கலை முறியடித்து, மக்களுக்கு உணவு வகைகள் கிடைக்க வழிசெய்ய வேண்டும். அந்தந்தப் பகுதிகளில் மக்கள் உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் விற்பனை நிலையங்கள் அதிகரிக்கப்படவேண்டும்?

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் அரசாங்க ஸ்தாபனங்களில் உள்ள பொருட்களை கூட்டுறவுசங்க கிளைகள் மூலம் மக்களுக்கு கஷ்டமின்றி கிடைக்கச்செய்ய வேண்டும். கிராமங்கள் தோறும் ஒரேவிலையில் கிடைக்க ஏற்பாடுசெய்யவேண்டும்.

''கடந்த அரசு காலத்தில் இருந்த நிலைமை மாறி வட பகுதியில் தற்பொழுது கூட்டுறவு சங்கங்கள் திருப்திகரமாக இயங்கிவருகிறது.

''விலைவாசிகளை குறைக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் நாங்கள் முழு ஆதரவும் வழங்குவோம்.

''மக்கள் கடைகள் மற்றும் இடங்களிலும் அரம்பிக்கப்படவேண்டும், கூட்டுறவு மொத்த ஸ்தாபனமும் விஸ்தரிக்கப்படவேண்டும்.

''தங்கள் விஜயத்தை நாங்கள் நல்லமுறையில் பயன்படுத்தாவிடில் மக்கள் குறை சொல்லுவார்கள்.

''கடந்த் 2 வருடகாலத்தில் விவசாய உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. பொருட்களின் இறக்குமதியே இதற்குக் காரணமாகும்.

''அமரர் டட்லி சேனநாயக்கா அரசில்; நாங்களும் பங்காளராக இருந்தபோது ஒரு இறக்குமதிக் கொள்கையிருந்து வந்தது. உருளைக்கிழங்கு இறக்குமதி தடை செய்யப்பட்டதால், இங்கு உருளைக்கிழங்கு உற்பத்தி அதிகரித்தது. இந்த இறக்குமதி கொள்கையால் வடபகுதி விவசாயிகள் பயனடைந்தார்கள். விவசாயிகளுக்கு ஒரு அமைப்பு இருந்தால் அதன் மூலம் பயன் அடைவார்கள் என்று தாங் தெரிவித்துள்ளீர்கள்.

''வடபகுதி விளைபொருள் உற்பத்தி சங்கம், விவசாயிகளின் நலன்களை கவனித்து வந்தது. கடந்த அரசு இந்த சங்கத்தை சுவீகரித்துவிட்டது. விவசாயிகள் நன்மைகருதி மீண்டும் இச் சங்கத்தை விவசாயிகளிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

''நாட்டிற்குத் தேவையான வெங்காயத்தை கடந்த காலத்தில் விளைபொருள் சங்கம் விவசாயிகளிடமிருந்துபெற்று, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்கி வந்தது காங்கேசன்துறை துறைமுகத்தின் அவசியம்பற்றி இங்கு மாவட்ட அமைச்சர் எடுத்துக்கூறினார். இதற்கென வரவு செலவுத்திட்டத்தில் 50,000 ரூபா ஒதுக்கப்பட்டது. கடந்த அரசு இந்த 50,000 ரூபாவையும், இங்குள்ள யந்திரங்களை திருப்பிக் கொண்டு செல்வதற்கு செலவிட்டது. இதுதான் கடந்த அரசு எடுத்த நடவடிக்கையாகும்.

''காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் வளர்ச்சிக்கு துறைமுக அபிவிருத்தி அவசியமாகும். பலவ டங்களுக்குமுன்பிருந்தே இதுபற்றி கூறிவருகிறேன். இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

''கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு ஒரு ரயில் எண்ணை கொண்டுவருகிறது. மற்றொரு ரயில் காங்கேசன்துறையிலிருந்து காலிக்கு சீமெந்து பொருள் கொண்டு செல்லுகிறது; இவையாவும் கப்பல்மூலம் அனுப்பப்பட்டால் ரயில் சேவையை நல்ல முறையில் பயன்படுத்தலாம்.

''இங்குநான் அரசியல்பற்றி பேசவில்லை. அதனை பாராளுமன்றத்திலும் வெளியிலும் வைத்துக் கொள்வோம் என்று கூறினர்.

தீவுப்பகுதியில் மக்கள்கடை திறக்க வேண்டும் என்று ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கோரிக்கை விடுத்தார்.

திரு. கே. துரைரத்தினம், திரு. வி. ஆனந்தசங்கரி, திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரும் பேசினர்கள். (கு)

## மாவிலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து பயனடைவார்கள். உலகச்சந்தையில் குறைந்தாலும் 3 ரூபா 75 சதத்திற்குக் குறைய விற்கச்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை. அப்படிக் குறைத்தால், கரும்புச்செய்கையாளர் கருப்பட்டி உற்பத்தியாளரை பாதிக்கும்.

''கடந்தகாலத்தில் சம்பளங்கள் மிகவும் குறைவாக இருந்தபோது சீனியின் விலை 7 ரூபா 50 சதமாக இருந்தது. தற்போது சகல தொழிலாளர்களினதும் சம்பளமும் நாளாந்தம் கூலிவேலை செய்கிறவர்களின் சம்பளமும் 100 வீதம் அதிகரித்துள்ளபடியால் இந்த விலையேற்றம் அவ்வளவு பாதிக்காது'

''சீனி விலை உயர்வு உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உதவியாக இருக்கும். கருப்பட்டி உற்பத்தியாளர் மீண்டும் உற்பத்தியை ஆரம்பிப்பார்கள்.

உலக சந்தையில், இலங்கையிலும் பார்க்க மிளகாய் விலை குறைவாகும். விவசாயிகள் இங்கு உலக சந்தை விலைக்கு உற்பத்திசெய்யமாட்டார்கள்.

''இந் நாட்டிற்கு மாதம் 1500 தொன் மிளகாய் தேவை. ஆனல் இங்கு 1500 தொன் மிளகாய் உற்பத்தி செய்யப்படுவதில்லை. அதனல் கடந்தகாலத்தில் மிளகாய் விலை 40 ரூபாவாக அதிகரிக்கும் நிலை ஏற்பட்டது.

''உதாரணத்திற்கு உலகச் சந்தையில் 8 ரூபாவாக இருப்பதால் இங்கு மிளகாய் 11 ரூபாவாக இருக்கிறது. இங்கு உற்பத்தி நாட்டிற்கு தேவையானதாக இல்லை. இறக்குமதியை நிற்பாட்டினல் மிளகாய் விலை அதிகரித்துவிடும். அதனல், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் விற்பனை இலாகா இணைந்து உள்ளூர் மிளகாயை கொள்முதல்செய்ய ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. முதல் நடவையாக இவ்விரு ஸ்தாபனங்களும் இணைந்து செயல்படுகின்றது.

''நாட்டில் 170 விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. உற்பத்தியாளர் சங்கம் நாட்டில் 75 உள்ளது. இதில் யாழ்ப்பாணத்தில் மட்டும் 15 நிலையங்கள் உள்ளன உற்பத்தியாளர் சங்கங்கள், யாழ்ப்பாணம், வெலிமடை, ஹெவாகெட்ட ஆகிய இடங்களில் நல்ல முறையில் இயங்கி வருகிறது. உற்பத்தியாளரையும் பாவனையாளரையும் பாதுகாப்பது அரசின் கடமையாகும்.

''கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பது கூட்டுறவுச்சங்கங்களைப் பாதுகாக்கவும், கூட்டுறவு மொத்த விற்பனைநிலையம், சில்லறை விற்பனை நிலையமல்ல.

''காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி சம்பந்தமாக சிமெந்து கூட்டுத்தாபனம் கரையோரப் போக்குவரத்து சேவையினருடன் கலந்து ஆலோசனைசெய்து கப்பல் போக்குவரத்தினுல் ஆதாயம் உண்டென்ருல் அதுபற்றி ஆலோசிக்கப்படும் என்றும் கூறினர். (கொ)

# 1983 பற்றி 'லலித்' ஆருடம்

(யாழ்ப்பாணம்)

''1983ம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவரை யாவது அனுப்பிவைத்தால் அவரை மந்திரியாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்''

அச்சுவேலி ஐ. தே. க. கிளை திறப்புவிழாவில் பேசிய வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு கூறினர்.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி மேலும் கூறியதாவது: ''கிழக்கு மாகாணமும், மலைநாடும் முற்றும் முழுதாக ஐக்கியதேசியக் கட்சியை ஆதரிக்கிறது. அப்படியிருக்கும் போது வடக்கு மட்டும் ஏன் யூ. என், பி. யை ஆதரித்து பயனைப் பெறக்கூடாது? கடந்த தேர்தலின் போது, யூ. என். பி. காரியாலயங்கள திறந்து சரியான முறையில் செயல்படாதபடியால்தான் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கூடிய ஆசனங்களைப் பெறமுடியவில்லை. இருந்தும் அது எங்களுக்கு தோல்வியில்லை.

''கூட்டணியுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் கூட்டணி மூன்றில் இரண்டுவீத பெரும்பான்மையை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் எடுக்கவில்லை. யாழ், மாநகரசபையில்கூட நாம் குறைந்த வாக்குகளால்தான் வெற்றிபெறும் வாய்ப்பை இழந்தோம். ஆதலால் நீங்கள் வடக்கில் எங்கள் கட்சியை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். (கொ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியை வரவேற்கு முகமாக ஒரு பகிரங்கக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிரதான வீதியிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக் காரியாலயத்தில் திரு. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்களும், ஆதரவாளர்களும், அமைச்சரை இன்று பிற்பகல் 2-30 மணிக்கு வாடிவீட்டுச் சந்தியிலிருந்து கூட்டம் நடைபெறும் இடம்வரை ஊர்வலமாக அழைத்துச் செல்வர். (கொ)

## இந்திரராசா...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் இன்ஸ்பெக்டர் கருணரத்தின நீதிமன்றத்தில் சரணடைந்தபோது, வட மாநில பொலிஸ் பிரதி மாஅதிபர் திரு. எஸ். மகேந்திரன், பொலிஸ் பிரதி மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், அட்டோர்னிஜெனரலைப் பிரதிநிதிப்படுத்தும் திரு. ரேுகன் ஜயதிலக, சட்டத்தரணி ஏ. ஸி. டி. சொய்சா உட்பட யாழ். பொலிஸ்நிலைய உயர் அதிகாரிகளும் சமூகமாயிருந்தனர்.

நீதிபதி கே. எஸ். பகேசன் பொலிசாருக்கு விடுத்த உத்தரவில், இவ் வழக்கில் அட்டோர்னி ஜெனரலின் அறிக்கை இதுவரை நீதிமன்றத்துக்கு அனுப்பப்படாமல் இருப்பதாலும் அவசரகால நிலை அமுலிலிருக்கும் போது இக்கொலைநடை பெற்றிருப்பதாலும் இச்சம்பவம் பற்றி பூரணவிசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும், சந்தேக நபரை 14 நாட்களுக்கு ஒருமுறை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பொலிசாரைக் கேட்டுக் கொண்டார்.

பொலிஸ் தரப்பில் நீதவான் விடுத்த உத்தரவை வடமாநில பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு.எஸ். மகேந்திரன் ஏற்றுக்கொண்டு சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதாகத் தெரிவித்துக்கொண்டார். (செ)

## சம்பளப் பணம்...

(4-பக்கத் தொடர்ச்சி)

இருந்த ஆசிரியர்களுக்கு மிடையே நடந்த இழுபறியில் 'றிவோல்வரை' ஆசிரியர்கள் பறித்துக்கொள்ளவே, இரண்டு இளைஞர்களும் பின் சீட்டிலிருந்த ஆசிரியர்களின் கையிலிருந்த சம்பளப் பணப் பையை இழுத்தனர் என்றும் இச் சம்பவத்தில் சில ரூபா நோட்டுக்கள் காருக்குள் விழவே மீகுதிப் பணத்தை இளைஞர்கள்பறித்துக்கொண்டு ஒடி, அருகிலிருந்த சைக்கிளில் ஏறி மின்னல்வேகத்தில் மறைந்தனர் என்றும் கூறப்படுகிறது.

### மாணவர் துரத்தினர்

இச் சம்பவத்தை அறிந்த சக ஆசிரியர்களும் மாணவர்களும் சைக்கிள் இளைஞர்களைத் துரத்திச்சென்றபோதிலும் அவர்கள் பணத்துடன் வேகமாகச் சென்று பின்னர் ஒரு காரில்ஏறி மறைந்துவிட்டனர் என்றும் கூறப்பட்டது,

இந்த இளைஞர்கள் சென்ற கார், ஒரு சாம்பல் நிறத்தை உடையதுஎன்றும் 'சி. என்' 9 இலக்கத் தொடருள்ளது என்றும் பொலிஸ்விசாரணையில் தெரியவந்துள்ளது.

### அதிபர் காயம்

துப்பாக்கிப் பிரயோகத்தின் போது காரின் கண்ணடி நொறுங்கிய தன் விளைவாக காரைச் செலுத்திச்சென்ற இந்துக்கல்லூரி அதிபர் திரு. பி. வெற்றிவேலுவும் ஆசிரியர் ஒருவரும் சிறியகாயங்களுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்சப்பட்டனர்.

### பொலிஸ் அதிபர் பாராட்டு

மேற்படி சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா கருத்து வெளியிடுகையில் சம்பளப்பணம் கொள்ளையில் ஈடுபட்ட இரண்டுபேரையும் துரத்திப் பிடிப்பதில் துணிச்சலுடன் முயற்சித்த சாவகச்சேரிஇந்துக் கல்லூரி மாணவர்களையும் ஆசிரியர்களையும்தாம் வெகுவாகப் பாராட்டுவதாகக் குறிப்பிட்டார்.

யாழ். பொலிஸ் அதிபர் திரு .கிங்ஸ்லி விக்கிரமசூரியா இன்று காலை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் ஆராய்வார்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை மேற்படி சம்பளப்பணம் கொள்ளை சம்பந்தமாக எவருமே கைதுசெய்யப் படவில்லை. றிவோல்வர் பொலிஸ் பாதுகாப்பில் உள்ளது. (மட்டுவில் நிரு.)

## பாராட்டு

(மட்டக்களப்பு)

இந்து ஆலயங்களில் நீண்ட நாட்களாக நிலவிவந்த உயிர்ப் பலி கொடுக்கும் பூசைக்கு தடைவிதித்தமையைப் பாராட்டி மட்டுநகர் இந்து மாணவ பேரவையின் அமைப்பாளர் திரு. ம. வரதன் செய்தியொன்றை பிராந்திய அபிவிருத்தியமைச்சர் திரு. செ. இராசதுரைக்கு அனுப்பியுள்ளார்.

## சுற்றுப்போட்டி

(பலாலி)

'ஈழநாடு' ஆதரவில் வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் நடாத்தும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் நாளைய ஆட்டத்தில் பலாலி அண்ணா பீ. வி. கழகத்தை எதிர்த்து கொழும்புத்துறை-ஜெட் லையினேஸ் விளையாட்டுக் கழகம் மோதும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org